நம்பகத்தன்மையை மேம்படுத்தல்

SLAASMB

இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்புச் சபை

# ஆண்டறிக்கை 2020

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையானது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும்.

இந்த சபையின் தொழிற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகள் (பக்கம் 64 இனை பார்க்கவும்) நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு, முன்வைத்தல் மற்றும் கணக்காய்வின் போது அவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுடனும் இணங்குகின்றனவா என்பதனை கண்காணித்தலாகும்

# உள்ளடக்கம்


சபையின் உறுப்பினர்கள்.......... 01

சபையின் உறுப்பினர்கள் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு .......... 02

சபைக்கான அவதானிப்பாளர்கள் / அழைப்பாளர்கள் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு..........06

சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்கள் - 2020..........07

சபையின் தற்போதய பதவியணியினர்..........08

சபையின் தொழில்நுட்ப பதவியணியினர்..........09

செயற்பாடுகளின் மீளாய்வு 2020..........10

2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான மீளாய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்..........20

2020 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட பணிகள் ..........22

2020 ஆம் ஆண்டின் போதான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் ..........23

இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையின் செயலாற்றலை மேம்படுத்துவுதற்காக பின்பற்றப்பட வேண்டிய குறுங்கால மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள்..........28

செயலாற்றல் புள்ளிப் படிவம்..........30

2020 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன இணங்கக்கூடிய குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் (SBE's) அட்டவணை ..........32

2020 ஆம் ஆண்டின் போது மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கிடையே அவதானிப்புக்களுடன் இணங்கிய அவதானிப்புக் கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்ளப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் (SBE's) அட்டவணை..........38

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்காத பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களும் ..........42

2020 ஆம் ஆண்டின் போது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவத்தினால் நியமங்களை ஏற்படுத்துவதுடன் தொடர்புடைய செயற்பாடுகள் ..........43

கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை..........45

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சிக்கல் தொடர்பான தற்போதைய நிலைமை ..........50

நிதி நிலைமைக் கூற்று..........53

நிதிச் செயலாற்றல் கூற்றும் விரிவான வருமானக் கூற்றும்..........54

தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று..........55

காசுப்பாய்ச்சல் கூற்று..........56

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்..........57

குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் - SBEs ..........64

குறிப்புகள் ..........65

# ஆண்டறிக்கை
# 2020

# சபையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **செல்வி கே எம் ஏ என் தவுலாகல** *FCMA (UK), MBA (USJP)*<br>*MSc (Fin. and Busi. Econ.)(UK)*<br>துணை ஆளுநர், இலங்கை மத்திய வங்கி | தலைவர்<br>2020 பெப்ரவரி 28 இல் இருந்து | |
| **டி என் ஆர் சிறிவர்தன** *B.A (Hons), LLB , LLM, Attorney -at –Law*<br>கம்பனிகள் பதிவாளர் நாயகம் | முன்னால் பதவி வழி உறுப்பினர்<br>(2021 சனவரி 2 வரை) | |
| **ஏ என் குருகே** *B.Sc, B. Admin* | முன்னால் பதவி வழி உறுப்பினர்<br>(2020 நவம்பர் 06 வரை) | |
| **எச் எம் டப்ள்யு சீ பண்டார** *B.Com (Sp.), LLB, Attorney -at -Law*<br>உள்நாட்டு இறைவரி ஆணையாளர் | 2020 திசம்பர் 04 முதல் | |
| **ச மென்டிஸ்** *Attorney -at-Law*<br>பணிப்பாளர் நாயகம் - இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு | முன்னால் பதவி வழி உறுப்பினர்<br>(2020 மே 26 முதல்) | |
| **டபிள்யு டபிள்யு ஜெ சீ பெரேரா** *FCA, FCMA, B.Sc (B.Admin), CFE*<br>பங்காளர், *KPMG,* | நியமன உறுப்பினர்<br>(2020 பெப்ரவரி 17 முதல்) | ப.க. இலங்கை |
| **எச் எம் ஏ ஜயசிங்க** *FCA, FCMA, CIPFA*<br>தலைவர், ப க இலங்கை, உள்நாட்டு முகாமைப் பணிப்பாளர், ஏனஸ்ட் அன்ட் யங், இலங்கை மற்றும் மாலைதீவுகள் | நியமன உறுப்பினர்<br>(2020 பெப்ரவரி 17 முதல்) | ப.க. இலங்கை |
| **எஸ் எம் எஸ் எஸ் பண்டார** *FCA, MBA (Col.)*<br>*B.Sc Acc. and Fin. Management (USJP)*<br>உப தலைவர், ப க இலங்கை பங்காளர், பீ ஆர் டீ சில்வா அன்ட் கம்பனி | நியமன உறுப்பினர்<br>(2020 பெப்ரவரி 17 முதல்) | ப.க. இலங்கை |
| **பீ ஆர் ஏ ஐ குணரத்ன** *ACMA (UK), CGMA, ACCA Affiliate, Dip.in Banking and Fin., B.Sc. Eng. (Hons), MBA (UK)*<br>Head of Finance - Resus Energy PLC | நியமன உறுப்பினர்<br>(2020 மார்ச் 02 முதல்) | முகாமைத்துவ பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இலங்கை பிரிவு |
| **ஆர் ரீ அமரசூரிய** *LLB (Hons.) (Col.), FCMA (UK), FCMA (SL), CGMA Attorney -at -Law*<br>Secretary - Bar Association of Sri Lanka, Former Commissioner Member Securities and Exchange Commission of Sri Lanka | நியமன உறுப்பினர்<br>2020 யூன் 09 முதல் | முகாமைத்துவ பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இலங்கை பிரிவு |
| **பீ டீ சமரசிங்ஹ** *FCA, FCMA (UK), MBA*<br>குழுப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் - ஓவர்சீஸ் ரியலிட்டி (சிலோன்) பீஎல்சீ | நியமன உறுப்பினர்<br>(2020 மார்ச் 02 முதல்) | இலங்கை வர்த்தக கழகம் |
| **கே கே எஸ் குணவர்தன** *BA (Hons.) Econ. Sp., Dip.in Hypermedia Eng.(Col.), Dip.in Multimedia Technology (Col.),*<br>முகாமைத்துவ பணிப்பாளர் / சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் - கிரபிக் சிஸ்டம்ஸ் (பிரை) லிமிடட் | நியமன உறுப்பினர்<br>(2020 யூலை 03 முதல்) | இலங்கை வர்த்தக கழகங்களின் சம்மேளனம் |
| **ஏ குணசேகர** *FCA, FCMA, MBA (USJP)*<br>சிரேஷ்ட உதவித் தலைவர், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் / சிரேஷ்ட் இடர் உத்தியோகத்தர் - டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ | நியமன உறுப்பினர்<br>(2020 பெப்ரவரி 12 முதல்) | இலங்கை வங்கியாளர் சங்கம் |
| **பேராசிரியர் ஏ ஜயமஹா** *PhD (USQ-Aus), M.Com (UoK), B.Com (UoK), FCA*<br>பீடாதிபதி – பட்டதாரி கல்வி பீடம், களனி பல்கலைக்கழகம் | நியமன உறுப்பினர்<br>(2020 மே 26 முதல்) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| **செல்வி எம் டி ஜீ எல் பெரேரா** *FCA, MBA* | சபையின் செயலாளர் | |

சனாதிபதியின் பீஎஸ்/எஸ்பீ/எஸ்பி/சுற்றறிக்கை/02/2019 சுற்றறிக்கைக்கு இணங்க 2019 நவம்பர் 29 ஆந் திகதி மேலே குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் சபையிலிருந்து இராஜினாமா செய்திருந்ததுடன் 2020 இல் புதிய சபைக்கு நியமனம் செய்யப்பட்ட புதிய உறுப்பினர்கள்

# சபையின் உறுப்பினர்கள்

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



**கே எம் ஏ என் தவுலாகல**

*FCMA (UK), MBA (USJP)*

*MSc (Financial and Business Economics), University of Essex, UK*

செல்வி. தவுலாகல, சபையின் தலைவராவர். அவர் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுனராவர் அவர் நிதி, கணக்காய்வு, நிதிய முகாமைத்துவம், ஒழுங்குபடுத்தல், பேரின முன்னெச்சரிக்கை அவதானிப்பு, மனித வள முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவம் போன்ற துறைகளை மேவுகை செய்யும் வகையில் இலங்கை மத்திய வங்கியில் 30 வருட சேவைக் காலத்தை கொண்டுள்ளார்.



**டி என் ஆர் சிரிவர்தன**

*B.A. (Hons.), LLB, LLM, Attorney – at – Law*

திரு. சிரிவர்தன, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் 1988 ஆம் ஆண்டு இணைந்திருந்தார். தற்போது அவர் கம்பனி பதிவாளர் நாயகமாக சேவை புரிந்து வருகின்றார். அவர் 33 வருடங்களுக்கு மேற்பட்ட சேவை அனுபவத்தை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கொண்டுள்ளார். திரு. சிரிவர்தன இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பேரவை உறுப்பினரொருவராகவும், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிலும் இலங்கை பிணையங்கள் மற்றும் பாவர்த்தனை ஆணைக்குழுவின் பதவி வழி சபை அங்கத்தவராகவும் உள்ளார்.



**எச் எம் டப் சீ பண்டார**

*B.Com (Sp.), LLB, Attorney – at – Law*

திரு. பண்டார தற்போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் பதவியினை வகிக்கும் அவர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் 33 ஆண்டுகளுக்கும் மேலாக சேவை புரிந்து வருகின்றார். அவர் அத்திணைக்களத்தின் செயற்திட்ட பணிப்பாளராகவும் RAMIS (வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை) செயற்திட்டத்தின் இணை குழு உறுப்பினராகவும் உள்ளார். திரு. பண்டார இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியல் கழகத்தின் அங்கத்தவராவர்.



**சீ மெண்டிஸ்**

*Attorney – at – Law*

திரு. மெண்டிஸ் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆவர்.

# சபையின் உறுப்பினர்கள்

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



**டபிள்யூ டபிள்யூ ஜே சி பெரேரா**

*FCA, FCMA, B.Sc (B.Admin), CFE*

திரு.பெரேரா, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் முன்னாள் தலைவரும், இலங்கை கேபிஎம்ஜி இன் பங்காளருமாவார். அவர் கேபிஎம்ஜி இன் இடர் ஆலோசனை மற்றும் தடய சேவைகளை வழி நடாத்துகின்றார். அத்துடன் அவர் ஐக்கிய அமெரிக்காவின் சான்றுறுதிப்படுத்திய மோசடி பரிசோதகர் கழகத்தின் உறுதிப்படுத்தப்பட்ட மோசடி பரிசோதகராகவும் ஐக்கிய அமெரிக்காவின் உள்ளகக் கணக்காய்வாளர் நிறுவகத்தின் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார்.



**எச் எம் ஏ ஜயசிங்ஹ**

*FCA, FCMA, CIPFA*

திரு.ஜயசிங்ஹ இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவர் ஆவர். இலங்கை மற்றும் மாலைதீவுகளின் எர்னஸ்ட் அன்ட் யங் நிறுவனங்களின் நாட்டின் நிர்வாகப் பங்காளராக உள்ளார். அவர் எர்னஸ்ட் அன்ட் யங்கில் வங்கி மற்றும் நிதிச் சேவை நடைமுறையின் பொறுப்பான உறுதிப்படுத்தல் தலைவராகவும் உள்ளார்.

கணக்கீடு மற்றும் கணக்காய்வில் 38 வருட விரிவான அனுபவமுள்ள திரு. ஜயசிங்க, தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் (SAFA) கணக்கீட்டு நியமங்கள் குழு மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தில் நியதிச்சட்ட கணக்கீட்டு நியமங்கள் குழு என்பவற்றின் தலைவராக பணியாற்றுகிறார். அவர் பல ஏனைய சட்ட அமைப்புக்கள், தொழில்முறை சங்கங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் உறுப்பினராக பணியாற்றுகிறார். சில பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வுக் குழுக்களின் ஆலோசகராகவும் பணியாற்றுகிறார்.



**எஸ் எம் எஸ் சஞ்ஜய பண்டார**

*FCA, MBA (Colombo) B.Sc Accountancy and Financial Management (USJP)*

திரு. பண்டார இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் உப தலைவர். அவர். பீ.ஆர்.டீ சில்வா அன்ட் கம்பனி பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பங்காளராக உள்ளார். அத்துடன் அவர் காப்பீட்டு சேவைகள் மற்றும் நிதி அறிக்கையிடலில் விசேடத்துவத்துடனான 23 ஆண்டு நடைமுறை அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பு (CAPA) மற்றும் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம் (SAFA) ஆகியவற்றின் குழு உறுப்பினராகவும் உள்ளார். மேலும், அவர் களனிப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் என்பவற்றின் ஆளுகைச் சபை உறுப்பினராக உள்ளார்.



**பி ஆர் ஏ ஐ குணரத்ன**

*ACMA (UK), CGMA, ACCA Affiliate, Dip. in Banking and Finance, B.Sc. Eng. (Hons), MBA (UK)*

திரு.குணரத்ன நிதிப் பிரிவின் தலைவராகவும் கணக்கீடு மற்றும் நிதித் துறையில் 10 ஆண்டு அனுபவத்தை கொண்டுள்ளார். கடந்த காலங்களில் அவர் Brandix தொகுதி மற்றும் KPMG இலும் சேவையாற்றியுள்ளார். அவர் சர்வதேச சான்றுறுதிப்படுத்தப்பட்ட தொழில்துறை கணக்காளர்கள் சம்மேளனத்தின் மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் வட ஆபிரிக்கா பிராந்திய ஆலோசனைக் குழுவின் அங்கத்தவராக உள்ளதுடன் CIMA இன் சிரேஷ்ட விரிவுரை யாளருமாவார். இலங்கை, மியன்மார், வியட்நாம், நைஜீரியா மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியங்கள் உள்ளடங்கலாக பல்வேறு பூகோள பிராந்தியங்களில் CIMA விரிவுரைகளை நடாத்தியுள்ளார்.

# சபையின் உறுப்பினர்கள்

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



### ஆர் ரீ அமரசூரிய

*LLB (Hons.) (Colombo), FCMA (UK), FCMA (SL), CGMA, Attorney-at-Law*

திரு.அமரசூரிய இலங்கையில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஒரு வழக்கமான வழக்கறிஞராக உள்ளார், மேன்முறையீட்டுச் சட்டம் மற்றும் அரசியலமைப்பு மற்றும் பொதுச் சட்டத்தின் அனைத்து அம்சங்களிலும் நிபுணத்துவம் பெற்றுள்ளதுடன் சிவில், ஒப்பந்தம், வணிகம், ஆதனம், வரியியல் வங்கியியல், தொழிலாளர் மற்றும் சட்டத்தின் ஏனைய துறைகள் உள்ளடங்கலாக பல்வேறு துறைகள் மற்றும் விடயங்களில் பல்வேறு ஒழுங்குமுறைகளை கொண்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டில், 40 வயதிற்குட்பட்ட மிகச் சிறந்த CIMA உறுப்பினராக (இலங்கை) பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) பெறுமதிமிக்க CIMA ஸ்டார் கோல்ட் விருதைப் பெற்றார். அத்துடன் அண்மையில் 2021 இல் LMD - CIMA Trailblazers இல் ஒருவராக பெயர் சூட்டப்பட்டார்

அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராகவும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும், இலங்கை சட்டக் கல்விக்கான ஒருங்கிணைந்த சபையின் உறுப்பினராகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டக் கல்வித் துறையில் நிலையியல் குழுவில் உறுப்பினராகவும், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் சட்ட பீடத்தின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் மற்றும் இலங்கை தேசிய தொழில் நியாய சபையின் ஆளுகை சபை உறுப்பினராகவும் உள்ளார். அவர் ஆசியா மற்றும் பசுபிக் சட்ட சம்மேளனத்தின் (LAWASIA) நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

அவர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (SEC) முன்னால் அனைக்குழு அங்கத்தவராக உள்ளார்.



### கே கே எஸ் குணவர்த்தன

*BA (Hons.) Economics Sp., Dip.in Hypermedia Engineering (Colombo), Dip.in Multimedia Technology (Colombo), PGDip in Busi. and Fin. - ICA (SL)*

வரையறுக்கப்பட்ட கிராபிக் சிஸ்டம்ஸ் தனியார் நிறுவனத்தின் தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளரான திரு. குணவர்த்தன அச்சிடுதல், தகவல் தொழில்நுட்பம், கணக்கீடு மற்றும் நிதித் துறையில் 35 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

தற்போது திரு.குணவர்த்தன ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் வர்த்தகத் தகவல் மற்றும் ஊக்குவிப்பு தொடர்பான ஆலோசனைக் குழுவின் தலைவராக உள்ளார். அவர் இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் சிரேஷ்ட உப தலைவராகவும் மற்றும் பல ஏனைய கம்பனிகள் மற்றும் சங்கங்களின் சபைகளிலும் பணியாற்றுகிறார்.

திரு.குணவர்த்தன 1999 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் இலங்கை தொழில் முயற்சியாளர் விருதுகள் உட்பட பல சிறந்த விருதுகளைப் பெற்றவர்.



### ஏ குணசேகர

*FCA, FCMA, MBA (USJP)*

DFCC வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவத்தின் சிரேஷ்ட உப தலைவர் / பிரதம இடர் முகாமைத்துவ உத்தியோகத்தரான திரு. குணசேகர வங்கித் துறையில் நிதி முகாமைத்துவம், நிதித் தொழிற்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில 36 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் இதற்கு முன்னர் ஹட்டன் நஷனல் வங்கியின் பிரதம நிதி உத்தியோகத்தராகவும், DFCC வங்கியின் சிரேஷ்ட உப தலைவர் / பிரதம நிதி உத்தியோகத்தராகவும், பணியாற்றியுள்ளார்.

அவர் DFCC தொகுதியின் பல கம்பனிகளின் சபைகளிலும் சபை உப குழுக்களிலும் பணியாற்றுகிறார்.

# சபையின் உறுப்பினர்கள்

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



## பி டி சமரசிங்ஹ

*FCA, FCMA (UK), MBA*

திரு. சமரசிங்ஹ, இலங்கையிலுள்ள முதன்மை ஆதனக் கம்பனியான ஓவர்சீஸ் ரியலிட்டி (சிலோன்) பீஎல்சீ இன் குழுப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராவர். இவர் உற்பத்தி, பெருந்தோட்ட மற்றும் ரியல் எஸ்டேட் ஆகிய துறைகளில் 30 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை மற்றும் முகாமைத்துவ அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் பல பொது பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத நிறுவனங்களின் சபைகள் மற்றும் சபை உப குழுக்களின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

திரு. சமரசிங்க இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனம், இலங்கையின் தொழில்தருநர் சம்மேளனம், இலங்கை கைத்தொழில் கழகம் மற்றும் இலங்கை கொண்டமோனியம் டெவலப்பர்கள் சங்கம் போன்ற பல நிறுவனங்களில் முன்னாள் தலைவராக இருந்தார். அவர் இங்கிலாந்தின் (இலங்கை பிரிவு) பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மற்றும் CIMA (UK) இன் முன்னால் பேரவை உறுப்பினராகவும் இருந்தார். மேலும் அவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் கடந்த கால சபை உறுப்பினர் ஆகவும் இருந்தார்.



## பேராசிரியர் ஏ ஜயமஹ

*PhD (USQ-Aus), M.Com (UoK), B.Com (UoK), FCA*

பேராசிரியர் ஜயமஹ, களனிப் பல்கலைக்கழக கணக்கீட்டுத் துறையின் (UoK) கணக்கீட்டு பேராசிரியரும் UoK இன் பட்டதாரி கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாகவும் உள்ளார். அவர் UoK இல் 38 ஆண்டுகளுக்கும் மேலான சேவை அனுபவத்தை கொண்டுள்ளதுடன் UoK இல் உள்ள வர்த்தக மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் மனித வள முகாமைத்துவ துறை, கணக்கியல் துறையின் தலைவராகவும், வணிக நிர்வாக நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். அவருக்கு 2010 ஆம் ஆண்டு தத்துவக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. அவர் ஜயமஹா புஷ்பகுமார மற்றும் கம்பனியின் பயிற்சியாளரும் முன்னோடி பங்காளருமாக உள்ளதுடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் நிறுவன மதிப்பாய்வின் மதிப்பாய்வாளராக தனது சேவையை வழங்குகிறார். அத்துடன் 2020 முதல் HDFC வங்கியின் இயக்குநராக உள்ளார்.

# சபையின் அவதானிப்பாளர்கள் / அழைப்பாளர்கள்

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

### சட்டப்பூர்வ கணக்காய்வுக் குழு, தலைவர்



### ரீ ஜே எஸ் ராஜகாரியர்

*FCA, FCCA, FCMA, CGMA*

திரு. ராஜகாரியர் இலங்கையிலுள்ள கேபிஎம்ஜி இன் பங்காளராவர். அவர் பொதுக் கணக்கீட்டு நடைமுறைகளில் 35 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் கேபிஎம்ஜி இன் கணக்காய்விற்கு தலைவராக செயற்படுகின்றார். அவர் கேபிஎம்ஜி இன் மத்திய கிழக்கு மற்றும் தென் ஆசிய பிராந்தியத்தில் நிதிச் சேவைகளின் தலைவராக இருந்ததுடன் இலங்கைக்கான கேபிஎம்ஜி இன் நிதிச் சேவைத் துறைக்கு பொறுப்பாக உள்ளார். அவரின் வேலை வெளிப்பாடுகள் ஓமான், துபாய், மாலைதீவுகள் மற்றும் லண்டனில் இருந்த வெளிநாட்டு அனுபவத்தை குறிப்பிடலாம். அவர் 2018 – 2020 காலப்பகுதியின் போது இலங்கை ACCA இன் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

திரு.ராஜகாரியர் அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் நியதிச்சட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் ஏனைய சில குழுக்கள் மற்றும் பீடங்களில் சேவையாற்றி கொள்கைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டல்களை வழங்குபவராக செயற்பட்டு வருகின்றார்.

### சபையின் அவதானிப்பாளர், திறைச்சேரி பிரதிநிதி



### கே எஸ் தயாரத்ன

*B.Sc. (Bus. Admin), MA, ACA*

திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராகவுள்ள திருமதி. தயாரத்ன பொதுத் துறையில் 16 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சபை உறுப்பினராக செயற்படுகின்றார்.

### பணிப்பாளர் நாயகம்



### ஏ ஐ மொஹொட்டி

*FCA, FCMA (UK), CGMA, BBA (Hons.), MBA (Leicester)*

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB) பணிப்பாளர் நாயகமாகவுள்ள திருமதி. மொஹொட்டி, நிதி மற்றும் வணிக முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் வர்த்தகத் துறைகளில் பல்வேறு வணிகப் பிரிவுகளில் கணக்காய்வு செய்வதில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவரது பணி வெளிப்பாடு SLAASMB இல் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்குவதை ஒழுங்குபடுத்துவதில் 20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சேவையை உள்ளடக்குகின்றது.

# 2020 ஆம் ஆண்டில் சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்கள்

## கணக்காய்வுக் குழு

திரு.எஸ் எம் எஸ் எஸ் பண்டார - தலைவர் (2020 ஜுன் 16 மு.அ.வ) .
பேராசிரியர் ஏ ஜெயமஹ - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திருமதி கே எஸ் தயாரத்னா - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)

## ஊதிய குழு

செல்வி. கே எம் ஏ என் தவுலகல - தலைவர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. பீ டீ சமரசிங்க - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. பீ ஆர் ஏ ஐ குணரத்ன - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. ஆர் ரீ அமரசூரிய - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திருமதி. கே எஸ் தயாரத்ன - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)

## தொழில்நுட்ப உப குழு

திரு. ஏ குணசேகர - தலைவர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. எச் எம் ஏ ஜயசிங்க - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
பேராசிரியர். ஏ ஜெயமஹா - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. பி டீ சமரசிங்க - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. சி மெண்டிஸ் - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)

## தகவல் தொழில்நுட்ப வழிநடாத்தல் குழு

திரு. பீ ஆர் ஏ ஐ குணரத்ன - தலைவர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. டப் டப் ஜே சீ பெரேரா - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. டி என் ஆர் சிறிவர்தன - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. கே கே எஸ் குணவர்தன - உறுப்பினர் (2020 ஜுலை 03 மு.அ.வ)
திருமதி. ஏ ஐ மொஹொட்டி - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)

## முரன்பாட்டு இணக்க தீர்வு குழு

திரு. சி மென்டிஸ் - தலைவர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. ஆர் டி அமரசூரிய - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. டீ என ஆர் சிறிவர்தன - உறுப்பினர் (2020 ஜுன் 16 மு.அ.வ)
திரு. எச் எம் டபிள்யூ சி பண்டார - உறுப்பினர் (2020 திசெம்பர் 15 மு.அ.வ)
திரு. ஏ குணசேகர - உறுப்பினர் (2020 திசெம்பர் 15 மு.அ.வ)

## சபையின் தற்போதய பதவியணியினர்






1. திரு. கே சிவகுமார்
2. திருமதி. ஆஷா அஹமத்
3. திருமதி. அனுஷா ஐ மொஹெட்டி
4 திருமதி. மொனிடா என் பண்டார
5. திருமதி. ஹப்சா பீ ரஸ்ஸாக்
6. திருமதி. இமல்கா இத்தமல்கொட
7. செல்வி. துமிந்தா குருவத்த
8. திருமதி. ஆர் ஏ நதீஷானி மனோதிகா
9. திரு. எச் எஸ் யூ பி ஜயவர்தன
10. திருமதி. டீ எம் நிலந்தி பீ தன்தெனி
11 திருமதி. எப் ஷிரோமி அபேகோன்
12. கே.ரசிக்க எஸ் பண்டார
13. திருமதி. திலினிகா மென்மென்தாரச்சி
14. திருமதி. களனி ஹெட்டிஆரச்சி
15. திருமதி. எம் லக்மாலி ஹேவகே
16 திருமதி. எல் வத்சலா மல்லவாரச்சி

# 2020 திசெம்பர் 31 இல் சபையின் தொழில்நுட்ப பதவியணியினர்

**திருமதி. அனுஷா ஐ மொஹொட்டி**
FCA, FCMA (UK), CGMA, BBA (Hons.),
MBA (Leicester)
பணிப்பாளர் நாயகம்

**திருமதி. ஆஷா அஹமத்**
FCA, MBA (Col)
பிரதிப் பணிப்பாளர் நாயகம்

**திருமதி. மொனிடா என் பண்டார**
FCA,ACA(E&W) BB Mgt.(Acc) Sp
பணிப்பாளர், தொழில்நுட்பம்

**செல்வி. ஹப்சா பீ ரஸ்ஸாக்**
FCA, ACMA(UK),CGMA,MBA (Sri.J)
பணிப்பாளர், தொழில்நுட்பம்

**செல்வி. டபிள்யூ ஜி எரங்க அமாரசி**
FCA, B.Sc.(Acc) Sp. (Hons.) MBS (Col)
பணிப்பாளர், தொழில்நுட்பம் (2021.03.01 வரை)

**திருமதி. எம் லக்மாலி ஹேவகே**
FCA, ACMA(UK),CGMA,MBA (Sri.J)
பணிப்பாளர் தொழில்நுட்பம்

**திருமதி. இமல்கா இத்தமல்கொட**
ACA, B.Sc. (Fin) Sp
பணிப்பாளர், தொழில்நுட்பம்

**திருமதி. திலினிகா மென்மென்தாரச்சி**
FCA, B.Sc. (Acc) Sp. (Hons.)
உதவி பணிப்பாளர் தொழில்நுட்பம்

**திருமதி. களனி ஹெட்டியாரச்சி**
FCA, B.Sc. (Acc) Sp. (Hons)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம்

**திருமதி.டி எம் நிலந்தி தன்தெனி**
FCA, BBA (Acc) Sp.(Hons.),AIB (SL)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம்

**திருமதி. எல் வத்சலா மல்லவாரச்சி**
FCA, B.Sc. (Acc) Sp. (Hons.)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம்

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

**1.அறிமுகம்**

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையானது (SLAASMB) 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும். சட்டத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் கட்டளை விதிகளின் பிரகாரம் சில நிறுவனங்கள் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகளாக (SBE) இனங்காணப்பட்டுள்ளன (SBE - இன் விளக்கத்திற்கு இலக்க, பக்கத்தை பார்க்கவும்). நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் போதும் அவற்றை சமர்ப்பிக்கும் போதும் இந்த SBE கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். மற்றும் இந்த SBE களின் கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது அவற்றின் கணக்காய்வாளர்கள் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுடனான இணக்கப்பாட்டினை கண்காணிக்க கூடிய வகையில், இச் சட்டத்தின்படி SBE கள் தமது கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்குச் (SLAASMB) சமர்ப்பிக்க வேண்டும்.

பெறப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் (SBE) கணக்காய்வுகளை மேற்பார்வை செய்தல், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களும் (SBE) அவற்றின் கணக்காய்வாளர்களும் நியமங்களுக்கு அமைவாக செயற்பட்டுள்ளனரா என்பதை ஆராய்ந்து அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகிய துறைகளில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் மூலம், குறித்துரைக்கப்பட்ட வியாபாரத தொழில் முயற்சிகளின் கணக்காய்வுகளை கண்காணிப்பதன் மூலமும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களும் அவற்றின் கணக்காய்வாளர்களும் நியமங்களுக்கு இணங்க செயற்பட்டுள்ளனரா என்பதை ஆராய்ந்து அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) தனது, செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இச் சட்டத்தின் கீழ், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்கள் பிரகடனப்படுத்தப்படுகின்றன அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பரிந்துரைகள் செய்வதற்காக மற்றும் நியமங்களை ஏற்றுக்கொள்வதில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு உதவி செய்வதற்காக இச் சட்டத்தின் கீழ் கணக்கீட்டு நியமக் குழுவொன்றும் கணக்காய்வு நியமங்கள் குழுவொன்றும் நிறுவப்பட்டுள்ளது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் சர்வதேச கணக்கீட்டு நியம சபையினால் (IASB) உருவாக்கப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் (IAS) மற்றும் சர்வதேச நிதியறிக்கையிடல் நியமங்கள் (IFRS) என்பவற்றின் அடிப்படையில் அமைந்த கணக்கீட்டு நியமங்களையே ஏற்றுக்கொள்கின்றன. அதேபோன்று, ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நியமங்கள், சர்வதேச கணக்காய்வு மற்றும் உறுதிப்படுத்தல் நியமங்கள் சபையினால் (IAASB) உருவாக்கப்பட்ட சர்வதேச கணக்காய்வு நியமங்களை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. தற்பொழுது நிறுவனம் மேற்குறித்த சர்வதேச நியமங்களுடன் ஒருங்கமைந்த சுமார் 38 கணக்காய்வு நியமங்களையும் 42 கணக்கீட்டு நியமங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன், இவை குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களினதும் அவற்றின் கணக்காய்வாளர்களாலும் பின்பற்றப்பட வேண்டும். குறித்த வருடத்தினுள் தனது சட்டரீதியான செயற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான சுருக்கமான விளக்கம் கீழ் குறிப்பிடப்படுகின்றது.

**2. ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் கொவிட் 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பாதிப்பு**

சுகாதார துறையினால் விதிக்கப்பட்ட Covid 19 தொற்றுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதிலும், கணக்காய்வுகளை நிறைவுசெய்வதிலும் சவால்களை ஏற்படுத்தின. வருடாந்த கணக்காய்வு கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இற்கு கையளிப்பதிலும் கணக்காய்வுக் குழுவின் முன்னிலையில் நடைபெறும் கணக்காய்வுகளின் நடவடிக்கைகளிலும் இதன் தாக்கம் காணப்பட்டது. மேலும், குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் ஊழியர்களின் வீட்டில் இருந்து வேலை செய்தல் மற்றும் சில கணக்காய்வு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணியாளர்கள் எதிர்கொள்ளும் அணுகல் கட்டுப்பாடுகள் காரணமாக மற்றும் மேலதிக தகவல்களைத் தேடும் போது குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளைத் தொடர்புகொள்வதற்கு தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் பயன்பாட்டை அதிகரிப்பதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறைகளை மாற்றுவதற்கு வழிவகுக்கும் மீளாய்வு வழிமுறைகளை இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இனால் மறுபரிசீலனை செய்ய வேண்டியேற்பட்டது.

இதன் விளைவாக, அறிக்கைகளை அனுகுதல், கடிதங்களை தயாரித்தல், தொழில்நுட்ப விவாதங்களை நடாத்துதல், பதிவேடுகளை இற்றைப்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுடன் கணக்காய்வுகள் மற்றும் கூட்டங்களை நடாத்துதல் போன்றவற்றில் பணியாளர்கள் இலத்திரனியல் ஊடகம் மூலம் மதிப்பாய்வுகளை அணுகுவதன் மூலம் இப் புதிய வாய்ப்புகள் விரிவாக்கப்பட்டதாகக் காணப்பட்டது.

இருப்பினும், பெரிய அளவிலான கூற்றுக்களை அணுகுவதிலும், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறுவதிலும் உள்ள இயல்பான வரம்புகள் காரணமாக, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) நிதிக்கூற்றுக்களின்

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

மொத்த உள்ளடக்கம் திட்டமிட்டபடி பராமரிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவை இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் சிறப்பம்சங்கள் மற்றும் கணக்காய்வுகளின் பரிசோதனை ஆகிய பிரிவுகளின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, தொழில்நுட்ப முன்னேற்றங்களை அதிகப்படுத்தி, பணியாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் பாதுகாப்பை சகல வேளைகளிலும் உறுதிப்படுத்தியவாறு ஊழியர்களின் திறனை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் நிகழ்நிலை அமர்வுகள் மூலமாக நடாத்தப்பட்டன.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் சட்டப்பூர்வ செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முன்னெடுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய சுருக்கமான விளக்கம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

## 3. நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு

### 3.1 மீளாய்வின் போது பின்பற்றப்படும் வழிமுறைகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கப்பாட்டினை உறுதி செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் (SBE) நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இணக்கப்பாடு காணப்படாத சந்தர்ப்பத்தில் இணக்கப்பாடின்மைக்கான காரணத்தை அடிப்படையாக வைத்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) முக்கியமாக அங்கீகாரம் மற்றும் அளவீட்டு சிக்கல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க வெளிப்படுத்தல் மற்றும் முன்வைப்புக்களிலுள்ள சிக்கல்கள் தொடர்பான இணக்கமின்மைகளில் கவனம் செலுத்துகிறது. நியமங்களுடன் குறிப்பிடத்தக்க இணக்கமின்மை தொடர்பான விடயங்களுக்கான காரணம் காணப்படாத பட்சத்தில், அத்தகைய நிதிக் கூற்றுக்களைத் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதாகக் கருதப்படும். சட்டப்பூர்வ விதிகளைப் பயன்படுத்துவதற்குப் பொருன்மையற்ற நிதிக் கூற்றுக்களில் சிக்கல்கள் கண்டறியப்பட்டால், அத்தகைய நிதிக்கூற்றுக்கள் எதிர்காலத்தில் இணக்கத்தை மேம்படுத்த அறிவிப்புக் கடிதம் வடிவில் அந்தந்த குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்படுவதோடு அவை செம்மைப்படுத்தல்களுடன் இணங்குவதாகக் கருதப்படும். நியமங்களிலிருந்து விலகல் காரணமாக நிதி நிலைமைகளிலும் நிதித் தொழிற்பாட்டிலும் கணிசமான மாற்றத்தினை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில், அடுத்து வெளியிடப்படுகின்ற நிதிக்கூற்றில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்காக சம்பந்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களிடமிருந்து அதற்கான மாற்று நடவடிக்கைகள் கோரப்படுகின்றன. விலகல்கள் சட்ட நடவடிக்கைகளை மீறப்பட்டிருப்பினும், குறித்த மீறல்கள் பாரதூரமானதாக கருதப்படாத சந்தர்ப்பத்தில், சபையினால் வழிகாட்டலொன்று வழங்கப்படும். எனினும், இவ்வாறான விலகல்கள் காரணமாக நிதிக்கூற்றுகள் தவறாகும் பட்சத்தில், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### 3.2 நிதிக்கூற்றுக்கள் மீளாய்வின் முக்கிய விடயங்கள்

2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, 1995 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் விதிகளுக்கு இணங்கும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் என அழைக்கப்படும் 1,657 நிறுவனங்களை சட்டத்தின் கீழ் அவதானிக்க வேண்டுமென இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இனங்கண்டுள்ளது. குறித்த வருடத்தினுள், 1194 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள், 1,232 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்ததுடன், அவற்றில் சில நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக இருந்தன.

குறித்த வருடத்தினுள், ஏனைய கணக்காய்வுக் கட்டுப்பாட்டாளர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும் 2016 இல் உலகளாவிய நடைமுறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்காய்வு கண்காணிப்பதற்கான அணுகுமுறையை இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) தொடர்ந்தும் பயன்படுத்தியது. கணக்காய்வின் போது ஆபத்து மிகுந்த பிரிவுகளை இனங்காணுவதைக் கொண்டு ஆரம்பமாகும் குறித்த அணுகுமுறையானது, பாரதூரமான பிரிவுகள் தொடர்பில் ஆழ்ந்த ஆய்வுகளை நடாத்தி வருகின்றது, இதன் விளைவாக கணக்காய்வுகளின் போது கணக்காய்வு நியமங்களில் ஏற்பட்டிருக்கும் விலகல்களை இனங்காண முடிந்துள்ளது. மேற்குறித்த அணுகுமுறையின் சுபாவத்தின் காரணமாகவும் கணக்காய்வின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக நிறுவனங்களுக்கு விபரமாக அறிக்கையிடுவதன் காரணமாகவும், 2016 இன் அணுகுமுறைக்கு முன்னைய அணுகுமுறைகளுடன் ஒப்பிடும் போது வழமையான கண்காணிப்பின் முடிவுக்கு கணிசமான நேரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அணுகுமுறையானது தரமான கணக்காய்வு சூழலை ஏற்படுத்தும் நோக்கில் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அதிக நேரம் எடுப்பதால் பதவியணியினருக்கு நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்ய கிடைக்கும் நேரம் வரையறுக்கப்பட்டதாக காணப்படுகிறது. தரமான கணக்காய்வானது நிதிக்கூற்றுக்களில் தவறான கூற்றுகளின் அபாயத்தை குறைப்பதால், ஏனைய நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு சுழற்சியான அடிப்படையில் முடிக்கப்படும் வேளையில் வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும் அதிக பாரதூரமான பகுதிகளின் மீது நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுகளை தெரிவு செய்தலில் கவனம் செலுத்தியது.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இல் பணிபுரியும் திறமையான பட்டயக் கணக்காளர்களுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் சம்பள அளவுத்திட்டங்கள் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நிதி அமைச்சு முயற்சிக்காமையினால் 2019 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப பணிப்பாளர் பதவி மற்றும் இரண்டு உதவிப் தொழில்நுட்பப் பணிப்பாளர் பதவிகள் ஆண்டு முழுவதும் வெற்றிடங்களாக இருந்தன. இதற்கு மேலதிகமாக, ஏப்ரல் 2019 முதல்

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

வெற்றிடமாக இருந்த பணிப்பாளர் நாயக பதவியின் கடமைகளை ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஒரு பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் பதில் கடமை அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதோடு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) ஆனது ஆண்டு இறுதியில் நிதிச் செயற்பாட்டு அறிக்கை மீளாய்வுகள் மற்றும் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு 9 கணக்காய்வு உத்தியோகத்தர்களை மட்டுமே கொண்டிருந்தது. இதன் காரணமாக இரண்டு பிரதிப் பொது முகாமையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக செயற்பாடுகளைக் கண்காணிக்கும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.
ஆபத்து மிகுந்த, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் இணக்கப்பாட்டு நிலையை மேம்படுத்தும் நோக்கில் அபாயம் மிகுந்த குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதில் கவனம் செலுத்துவதிலேயே இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) ஆண்டினை ஆரம்பித்தது. இருப்பினும், முன்னைய பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள கொவிட் 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட அணுகல் கட்டுப்பாடுகளின் விளைவாக, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) அதிக எண்ணிக்கையிலான தனியார் துறையின் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களை உள்ளடக்குவதில் கவனம் செலுத்தியது. இதன் விளைவாக, அண்ணளவாக 55% தனியார் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு 45% மீளாய்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் கலவையில் இந்த மாற்றமானது, திட்டமிடப்பட்ட 3-5 வருட கால எல்லைக்குள் தனியார் நிறுவனங்களின் செயல்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்ய ஏதுவாக அமைந்தது.

மீளாய்வாண்டில் நான்கு தொழிநுட்ப பதவிகள் வெற்றிடங்களாக இருந்தும், 694 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் 725 நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 694 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் 732 நிதிக்கூற்றுக்களின் தொகுப்புக்கள் ஒப்பிடப்பட்டன. இது 2019 ஆம்

### 3.3 சபையின் செயலாற்றல் புள்ளிவிபரங்கள்

| | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|
| **1. வியாபார் முயற்சிகளின் எண்ணிக்கை (காலப்பகுதி இறுதியில்)** | 1,559 | 1,579 | 1,608 | 1,657 |
| **2. கிடைக்கப் பெற்ற நிதிக்கூற்றுக்கள்** | 1,643 | 1,567 | 1,635 | 1,232 |
| நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை (பல வருட கூற்றுகள் உட்பட) | | | | |
| குறி. வியா. முயற்சிகளின் எண்ணிக்கை | 1,479 | 1,457 | 1,521 | 1,194 |
| **3. நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு** | | | | |
| மீளாய்வுகளின் எண்ணிக்கை | 518 | 638 | 720 | 732 |
| குறி. வியா. முயற்சிகளின் எண்ணிக்கை | 459 | 608 | 699 | 694 |
| **4. மீளாய்வு கண்டுபிடிப்புக்கள்** | | | | |
| 4.1 **இணக்கங்கள்** | | | | |
| நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 324 | 430 | 450 | 437 |
| குறி. வியா முயற்சிகளின் எண்ணிக்கை | 306 | 413 | 440 | 421 |
| 4.2 **அவதானிப்புகளுடனான இணக்கங்கள்** | | | | |
| நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 185 | 202 | 267 | 293 |
| குறி. வியா முயற்சிகளின் எண்ணிக்கை | 150 | 193 | 256 | 274 |
| 4.3 **இணக்கமின்மைகள்** | | | | |
| (பணிகள், வழிகாட்டல்கள், மற்றும் எச்சரிக்கைகள்) | | | | |
| நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 9 | 6 | 3 | 2 |
| குறி. வியா முயற்சிகளின் எண்ணிக்கை | 9 | 6 | 3 | 2 |
| **5. மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் % நிதிக்கூற்றுக்களில் கண்டுபிடிப்புகள்** | | | | |
| இணக்கங்கள் | 62% | 67% | 62% | 59% |
| அவதானிப்புகளுடனான இணக்கங்கள் | 36% | 32% | 37% | 40% |
| இணக்கமின்மைகள் (பணப்பொறுப்புகள், வழிகாட்டல்கள், மற்றும் எச்சரிக்கைகள்) | 2% | 1% | 1% | 1% |

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

ஆண்டில் 699 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுடன் தொடர்பான 720 நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டன.
2020 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்ககளில் 1% இணக்கமின்றிய அறிக்கைகள் என்பதை வெளிப்படுத்தியது. மீளாய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்ககளில் 59% இணக்கமாக இருப்பதையும், 40% நிதிக் கூற்றுக்கள் அறிவிப்புக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட செம்மையாக்கல்களுடன் இணக்கமாக இருப்பதையும் இது காட்டுகிறது.

நிதி நிலை மற்றும் நிதி செயலாற்றல் கருத்திற் கொள்ளக்டியளவு மாற்றியமைத்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்குரிய விதிகளிலிருந்து பொருண்மையான விலகல்கள் இரண்டு குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதன்படி, குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட முயற்சிகளின் வடிவில் சீர்செய்தல் நடவடிக்கை, நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைப்பதில் திருத்தங்களைச் செய்தது.

சட்ட ஏற்பாடுகளைப் பிரயோகிக்க வேண்டிய அவசியமில்லை என கண்டறியப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களில் இருந்து விலகியவைகள், கடிதங்கள் மூலம், விரிவான விசாரணைகள் இல்லாமல் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு அவதானிப்புக்களாக, தெரிவிக்கப்பட்டது. இதனால் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு தேவையான இடங்களில் அவர்களுக்கு சீராக்கிக் கொள்ள முடியும். இந்த ஆண்டில், 293 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அவதானிப்புக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

(epjpf;$w;Wf;fspd; kPsha;tpd; NghJ Nkw;nfhs;sg;gl;l mtjhdpg;GfSf;F gf;fk; 20 kw;Wk; 2020 ,y; ngwg;gl;l nghWg;Ngw;wy;fSf;F 22 k; gf;fj;ijg; ghu;க்கவும்).

## 4 கணக்காய்வுப் பரிசோதனை

வருடத்தினுள் தொழில்துறையில் ஈடுபட்டிருந்த 7 பட்டயக் கணக்காளர் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த 27 கணக்காய்வுகள் பரீட்சிக்கப்பட்டன, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டில் 7 நிறுவனங்களின் மூலம் 33 கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வருடத்தினுள் உள்ளக பதவி உயர்வுகள் மற்றும் பதவி விலகல் காரணமாக பரிசோதனையில் ஈடுபட்டிருந்த தொழிநுட்ப பதவியணியினர் தொடர்பில் நான்கு பதவி வெற்றிடங்கள் நிலவியதன் நேரடி விளைவாக, பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப பதவியணியினர் குறைவான எண்ணிக்கையில் இருந்ததனால் 2020 ஆம் ஆண்டை விட இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோனைகள் குறைவாக காணப்பட்டன. 2020 ஆகஸ்ட் 1 ஆம் திகதிக்குப் பிந்திய காலகட்டங்களுக்கு, தொற்றுநோயின் 1 வது அலையின் போது செய்யப்பட்ட கணக்காய்வுகளை ஆரம்பிப்பதனை ஒத்திவைத்ததும் ஒரு காரணமாக அமைந்தது.

இருப்பினும், தொற்றுநோயின் 2வது அலையின் போது, Microsoft Teams மூலம் வழக்கமான கணக்காய்வுகளை தொலைவிலிருந்து நடாத்துவதில் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) வெற்றி கண்டது.

மேலும், சமூக இடைவெளி பேணப்படுவதன் அவசியம் மற்றும் கருப்பொருள் கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது நேரடியாக தொடர்பு கொள்வதற்கான அணுகல் கட்டுப்பாடுகள் காரணமாக, 2020 ஆம் ஆண்டில் கருப்பொருள் சார்ந்த கணக்காய்வுகளை மேற்கொள்ளும் திட்டம் மறு பரிசீலனை செய்யப்பட்டது. கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் செயல்பாடுகளில் கோவிட் 19 இன் தாக்கத்தை நிவர்த்தி செய்யும் போது, கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வு நடைமுறைகளின் சரியான தன்மையை மீளாய்வு செய்வதற்கு மேலதிக நேரத்தை ஒதுக்க வேண்டியதன் காரணமாக ஆய்வுகள் வழக்கமான கணக்காய்வுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டன.

இதன் விளைவாக, 2019 இல் நடத்தப்பட்ட 12 கருப்பொருள் சார்ந்த கணக்காய்வுகளுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டில் கருப்பொருள் சார்ந்த கணக்காய்வுகள் நடாத்தப்படவில்லை. இருப்பினும், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) ஆண்டில் 2018 இல் நடத்தப்பட்ட கருப்பொருள் சார்ந்த கணக்காய்வுகளின் கண்டுபிடிப்புகளை பூர்த்தி செய்து அறிக்கையை வெளியிட்டது.

வருடத்தினுள், பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோவைகள் அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினூடாகத் தெரிவு செய்யப்பட்டன. எனினும், பரிசோதனைகளுக்கு கணக்காய்வுகளை தெரிவு செய்வதற்காக மிகப் பொருத்தமான அபாய அடிப்படையை தீர்மானிப்பதற்கான செயல்முறையை வடிவமைப்பதற்கான திட்டங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2019 இல் 6 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட 15 கணக்காய்வுகளுடன் ஒப்பிடுகையில் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட வழமையான பரிசோதனைகள் 3 நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட 3 குறைபாடுகளை அவதானிப்பதில் முடிவடைந்தன. முக்கிய அவதானிப்புக்கள் தொடர்பாக குறித்த கணக்காய்வு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்கப்பட்டன.

(வெளிக்கள கணக்காய்வு பற்றிய விவரங்களுக்காக 23 ம் பக்கத்தைப் பார்க்கவும்)

## 5. புலனாய்வு

### 5.1 அடம் கெப்பிட்டல் PLC

2014 மற்றும் 2015 மார்ச் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முறையான நிதிக்கூற்றுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை நிறுவனம் பேணிவரத் தவறியமை குறித்து வரையறுக்கப்பட்ட அடம் கெப்பிட்டல் நிறுவனத்தின் முன்னால் கணக்காய்வாளர் மறுப்பு அபிப்பாயத்தினை தெரிவித்துள்ளதன் விளைவாக, 2016 மார்ச் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளின் கணக்காய்வின் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை தற்போதைய கணக்காய்வாளர் தெரிவித்திருந்தார்.

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

அத்தோடு குறித்த நிதிக்கூற்றுகளை மீள் கணக்காய்வு செய்யுமாறு சபையினால் நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் மீள் கணக்காய்வுக்கான மேலதிக செலவுகளை ஏற்பதற்கு நிறுவனம் மறுப்புத் தெரிவித்தது. அதைத் தொடர்ந்து, 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வில், மேற்படி கணக்காய்வாளர் கணக்காய்வுத் நியமங்களைத் தொடர்ந்து மீறுவதும், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) ஆல் எழுப்பப்பட்ட விடயங்களைக் கவனிக்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. கணக்காய்வாளருக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றதன் பேரில், SLAASMB தேவையான ஆதாரங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

### 5.2 சிட்டி ஹவுசிங் என்ட் ரியல் எஸ்டேட் கம்பனி பிஎல்சி

சிட்டி ஹவுசிங் என்ட் ரியல் எஸ்டேட் கம்பனி பிஎல்சி, 2019 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதிக்கூற்றுக்களில் சில விடயங்கள் தொடர்பாக தொடர்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கத் தவறியிருந்தது. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இனால் இத்தகைய இணக்கமின்மை தொடர்பாக மீண்டும் மீண்டும் அறிவிக்கப்பட்ட போதிலும், நிறுவனம் பல ஆண்டுகளாக கூறப்பட்ட இணக்கமின்மைகளை சீர்செய்வதற்கு தவறிவிட்டது. விசாரணையைத் தொடர்ந்து, SLAASMB ஆனது இந்த நிறுவனம் மற்றும் நிறுவனத்தின் கணக்காய்வாளருக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய அடுத்த நடவடிக்கை குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனைகளைக் கோரியது. தற்போது இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) வினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து சட்டமா அதிபரின் மேலதிக ஆலோசனைகளைப் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளது.

### 6. பொது வியாபார முயற்சிகள் (COPE) தொடர்பான குழுவின் பரிந்துரைகள் மீதான செயற்பாடு

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களினதும் (SBEs) நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் மூலம் COPE இற்கு வழங்கப்பட்ட இணக்கங்களைத் தொடர்ந்து, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAAMB) இணக்கமின்மைகளின் மீதான அவதானிப்புக்களின் தரத்தினை மேம்படுத்தும் ஒரு சிறந்த முறையாக நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுக்காக அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு மாறியது. இதனடிப்படையில், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களையும் (SBEs) 3-5 வருடங்களில் மீளாய்வு செய்வதற்கு உத்தேசித்துள்ளதுடன், இது முறைப்படுத்தப்பட்ட சகல நிறுவனங்களையும் வருடாந்தம் மீளாய்வு செய்தல், உயர் அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்களை 3 வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்தல் மற்றும் குறைந்த அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்களை 5 வருடங்களினுள் மீளாய்வு செய்தல் என அமைந்திருக்கும். கணக்கீடு மற்றும் கணக்காய்வு 2015 (ROSC) எனும் தரம் மற்றும் குறியீடுகளின் பயன்பாடு தொடர்பான உலக வங்கி அறிக்கையில் உயர் அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்கள் தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசகர்களாலும் இது சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டில் பணிக்குழுவின் திறன் விருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த சர்வதேச ஆலோசகர்களினது உலகலாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் முறையாகவும் இது இனங்காணப்பட்டுள்ளது.

2020 இன் பரிசோதனை முடிவுகள் / மீளாய்வுகள் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்வின் அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட தெரிவு முறையானது நிதிக்கூற்றுகளினதும் கணக்காய்வினதும் ஒன்றிணைந்த ஆய்வு முறைமையினை வலுப்படுத்தியுள்ளதாக குறிப்பிடுகின்றன. இவ்வாறான நிதிக்கூற்றுக்களின் மீளாய்வினை நடாத்துவதானது, கணக்காய்வில் இணக்கமின்மைகளை இனங்காண்பதற்கு உறுதுணையாக அமைந்துள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் பிரத்தியேகமான விடயங்களை ஆய்வு செய்தல் மீதான கவனத்தினைத் தூண்டியுள்ளது.

### 7. நியமங்களை தயாரிப்பதற்கான ஒத்துழைப்பு

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு கண்காணிப்புச் சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு பரிந்துரைகள் வழங்கவும் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை பின்பற்றவும் நிறுவப்பட்டது.

2020 ஆம் ஆண்டில், மேற்கூறிய இரண்டு குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்கள் அடங்கிய தொகுதிகள் 2020 வெளியீடு செய்தல்,
- இலங்கை கணக்கீட்டு மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்கள் சிலவற்றில் திருத்தங்களை வழங்குதல்,
- கோவிட்-19 தொடர்பான கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு பரிசீலனைகள் குறித்த வழிகாட்டுதல் வெளியீடு,
- 2023 ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வண்ணம் SLFRS 17 “காப்புறுதி ஒப்பந்தங்கள்” இனை ஏற்றுக்கொள்ளல்
- பொருண்மையான தவறான அறிக்கையின் அபாயத்தைக் கண்டறிதல் மற்றும் மதிப்பிடுதல்” தொடர்பாக திருத்தப்பட்ட கணக்காய்வு நியமங்களை வழங்குதல்,
- 2021 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வருவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தற்போதைய இலங்கை கணக்கீட்டு நியமங்களை திருத்துதல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரம் செய்தல், அத்தகைய அறிவிப்புகளை சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் மொழிபெயர்ப்பது உட்பட,

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

- வெளிப்பாடு வரைவுகள் மற்றும் கலந்துரையாடல் காகிதங்களுக்குப் பதிலளித்தல்
- IFRS குறித்த தெளிவான ஆராய்ச்சி மற்றும் சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் சபை மற்றும் சர்வதேச கணக்காய்வு மற்றும் உத்தரவாத நியமங்கள் சபை வழங்கிய திருத்தங்களை ஆராய்தல் மற்றும்
- புதிய அல்லது திருத்தப்பட்ட நியமங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நிலையான பங்களிப்பை அங்கீகரித்து, நாட்டில் நிதி அறிக்கையிடலுக்கான கட்டமைப்பை அமைப்பதற்காக, கடந்த காலங்களில், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு வருடாந்த மானியத் தொகையை வழங்குவதற்கு நிதியமைச்சு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) ஊடாக ஏற்பாடு செய்திருந்தது.

கடந்தகால ஏற்பாட்டைத் தொடர்வதன் மூலம், இரண்டு குழுக்களின் செலவுகளுக்காக ஓரளவுக்கு நிதியளிப்பதற்காகவும், இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை அமுல்படுத்துவதற்காகவும், வருடத்தினுள், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) ஆல் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு 4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டது. (2020 ஆம் வருடத்தினுள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நிலையான அமைப்பு தொடர்பான நடவடிக்கைகளுக்கு பக்கம் 43 ஐ பார்க்கவும்)

## 8. சர்வதேச தொடர்புகள்

நிதி அறிக்கையிடல், கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டினை கண்கானித்தல் தொடர்பான உலகளாவிய ரீதியிலான அபிவிருத்தியுடன் இணைந்து செயலாற்றும் வகையில் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) ஆனது பல்வேறு சர்வதேச அமைப்புகளில் உறுப்புரிமையைப் பெற்றிருந்தது. இத் தொடர்பானது ஏனைய சர்வதேச கட்டுப்பாட்டாளர்களிடமிருந்து தகவல்களையும் உதவிகளையும் பெறவும் இணைந்த செயற்பாடுகளாக பல கட்டுப்பாட்டாளர்களுக்கு நன்மை விளைவிக்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இற்கு வழி அமைத்துள்ளது.

குறித்த ஆண்டில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) பின்வரும் சர்வதேச நிறுவனங்களில் தன் உறுப்புரிமையை பெற்றிருந்தது.

a) சுயாதீன கணக்காய்வு கட்டுப்பாட்டாளர்களின் சர்வதேச அமைப்பு (IFIAR) – 2007 இல் இடம்பெற்ற முதல் சந்திப்பிலிருந்து IFIAR இன் உறுப்புரிமையைப் பெற்றுள்ளது.

b) சர்வதேச கணக்காய்வு மற்றும் உத்தரவாத நியமங்கள் சபையின் ஆலோசனைக் குழு (IAASB) – 2007 முதல் உறுப்பினராக உள்ளது.

c) கணக்காளர்களுக்கான சர்வதேச நியமங்களுக்கான பொறிமுறைகள் சபையின் ஆணைக்குழு (IESBA) – 2009 இல் உறுப்பினராக இணைத்துக்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB) அங்கத்தவர்கள் இலங்கை நாட்டினை பிரதிநிதித்துவப்படுத்தி வருடாந்தம் ஐ.நா சபையினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற கணக்கீடு மற்றும் அறிக்கையிடலின் சர்வதேச நியமங்கள் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான நிபுணத்துவக் குழுக்களின் (ISAR) அமர்வுகளிலும் கலந்துகொண்டனர்.

உலகலாவிய ரீதியில் தாக்கம் செலுத்திய கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக, சகல கூட்டங்களும் மாநாடுகளும் இடைநிறுத்தப்பட்டன. எவ்வாறாயினும், சில சர்வதேச அமைப்புகள் தாம் ஏலவே திட்டமிட்ட கூட்டங்களை நிகழ்நிலை ஊடாக தொடர்ந்து நடாத்திச் சென்றன.

குறித்த வருடத்தில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் ஒரு அங்கத்தவர் இரு ஆலோசனைக் குழுக்களினால் நிகழ்நிலை ஊடாக நடாத்தப்பட்ட கூட்டங்களில் கலந்துகொண்டதோடு IFIAR இனால் ஒழுங்குசெய்யப்பட்டு உலகளாவிய பொதுக் கொள்கைகள் குழுவில் அங்கத்துவம் வகிக்கும் கணக்காய்வு நிறுவனங்களுக்கிடையே நடாத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட அமர்வுகளில் மற்றொரு அங்கத்தவர் கலந்து கொண்டார். குறித்த IFIAR இன் அமர்வுகளானது சாதாரன சூழ்நிலைகளிலாயின் அவர்களின் நிகழச்சி நிரலின் ஒரு பகுதியாக காணப்பட்டிருக்கும்.

எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் அரசினால் விதிக்கப்பட்டிருந்த சர்வதேசப் பயணக்கட்டுப்பாடுகள் காரணமாக IFIAR இனால் 2020 பெப்ரவரி மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலகின் நாலாபுறமிருக்கும் கணக்காய்வு நிறுவனங்கள் பங்கேற்கும் ஆய்வுகள் தொடர்பான பயிற்சிப்பட்டறையில் முதன்முறையாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இனால் பங்குபற்ற முடியவில்லை. IFIAR இனால் சுயாதீன கணக்காய்வு நிறுவனங்களின் பங்கேற்புடன் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் குறித்த பயிற்சி செயலமர்வானது இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் இயலளவு விருத்தி மற்றும் அறிவுப் பரம்பலின் முக்கிய மையப்புள்ளியாகும்.

இவ் உலகளாவிய செயலமர்வுகளில் பங்கேற்கின்றமை இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இனது திறன் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய நிகழ்வாகும். கணக்கீட்டுக் கொள்கை சம்பந்தமான கூட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் பங்குகொள்ளும் போது உலகின் பல்வேறு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த அமர்வுகளில் பங்குகொள்ளும் கணக்காய்வு நிறுவனங்களுடனான கல ந்துரையாடலுக்கும் வலையமைப்பொன்றை உருவாக்குவதற்கும் வழியமைக்கின்றது.

## 9. மனித வளங்கள்

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

## 9.1 பதவியணியினர்

2020 திசெம்பர் 31 அன்று இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இல் பட்டயக் கணக்காளர்கள் 11 பேர் உள்ளடங்களாக 18 பேர் பணியாற்றுகின்றனர்.மொத்த தொழில்நுட்ப பணிக்குழுவானது பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம், 05 பணிப்பாளர்கள் மற்றும் 04 உதவி முகாமையாளர்களை உள்ளடக்கியிருந்த அதேவேளை இவர்களுள் மூவர் ஒப்பந்த அடிப்படையிலும் எட்டு பேர் நிரந்தர பதவியணியினராகவும் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

அவ் வருடத்தில் மீளாய்வு செயற்பாடுகளில் காணப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இனால் எதிர்பார்த்த எண்ணிக்கையில் நிதி அறிக்கை மீளாய்வு மற்றும் கணக்காய்வு செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை. இதற்கான இடைக்கால தீர்வு நடவடிக்கையாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) ஆனது நிதிக்கூற்றுகளை மீளாய்வு செய்வதற்காக வெளியக மீளாய்வாளர்களின் சேவைகள் தொடர்ந்தும் பெற்றுக்கொண்டது.

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலுள்ள முக்கிய சவாலாகக் கருதப்படும் கடுமையான ஊழியர் பற்றாக்குறையினை விரைவில் நிவர்த்தி செய்வதற்காக சகல முயற்சிகளையும் பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக ஊழியர் பற்றாக்குறை தொடர்பில் நிதி அமைச்சின் உயரதிகாரிகளுடனான சந்திப்புகள், பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்ததுடன் அது தொடர்பான நிதி அமைச்சின் சாதகமான முடிவுக்கு பணிப்பாளர் சபை காத்திருக்கின்றது.

## 9.2 வெளிக்கள மீளாய்வாளர்களின் குழு

2012 ஆம் ஆண்டில் COPE குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கிணங்க இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) மீளாய்வு செய்யும் நிதிக் கூற்றுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சியில் நிதிக் கூற்றுகளை மீளாய்வு செய்வதற்காக வெளிக்கள மீளாய்வாளர்களின் சேவைகள் தொடர்ந்தும் பெற்றுக்கொண்டது. எனினும் குறித்த ஆண்டில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பணியாளர்களை அலுவலகத்துக்கு அழைத்தல் மற்றும் சமூக இடைவெளி பேணல் போன்ற கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) ஆனது ஏற்கெனவே காணப்பட்ட வெளிக்கள மீளாய்வாளர்கள் குழுவிற்கென புதியவர்கள் எவரும் நியமிக்கப்படாததோடு முன்னைய வருடங்களில் வெளிக்கள ஆய்வாளர்களின் சேவைகளின் தரத்தின் அடிப்படையில் இரண்டு மீளாய்வாளர்கள் பணி நிறுத்தம் செய்யப்பட்டனர். அவ்வகையில் குறித்த வருட இறுதியில் 15 பேர் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் வெளியக மீளாய்வாளர்கள் குழுவில் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

குறித்த காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளின் தரம் தொடர்பான ஆய்வுகளானது, வெளியக மீளாய்வாளர்களின் மீளாய்வுகளின் தரத்தின் மேம்படுத்தலுக்கு உதவியாக அமைந்தது.

மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்வுகள் 115 ஆக காணப்பட்ட அதேவேளை குறித்த கோவைகளின் ஆரம்பகட்ட மீளாய்வுகள் வெளியக மீளாய்வாளர்களினரால் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டில் வெளிக்கள மீளாய்வாளர்களனிால் 90 கோவைகள் ஆரம்ப கட்ட மீளாய்வுக்குட்படுத்தப்பட்டதுடன் அவர்களின் சேவைக்காக கொடுப்பனவாக ரூபா 1.35 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

வெளிக்கள மீளாய்வாளர்களினால் பூரணப்படுத்தப்பட்ட ஆரம்ப கட்ட மீளாய்வுகளை பூரணப்படுத்தத் தேவையான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், திருத்தங்களுக்கான ஒப்பந்தங்களைக் கோரல் மற்றும் அவதானிப்புக்களுக்கான கடிதங்களை வழங்குதல், சட்டத்தின் கீழ் பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் தொழில்நுட்பக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்வுக்ளுக்கு மேலதிகமாக 617 நிதிக்கூற்றுகளின் ஆரம்ப கட்ட மீளாய்வு நடவடிக்கைகளும் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் தொழில்நுட்பக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

## 10. ஆளுகை

சட்டமூலத்தின் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) உறுப்பினா் சபையால் நிர்வகிக்கப்படுகின்றது. அதற்கிணங்க இனங்காணப்பட்ட நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட வேட்புமனுக்களில் நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட 3 முன்னால் உத்தியோகபூர்வ உறுப்பினர்களையும் 10 உறுப்பினர்களையும் சபை கொண்டுள்ளது. கம்பனி பதிவாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் மற்றும் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் முன்னால் உத்தியோகபூர்வ உறுப்பினர்களாக உள்ளனர். நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கி, இலங்கை பட்டயக் கணக்காளா் நிறுவகம் (3 உறுப்பினர்கள்), ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் இலங்கைப் பிரிவு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை வர்த்தக வாணிப சங்கங்களின் சம்மேளனம், இலங்கை வங்கிகள் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு. ஆகியவற்றிலிருந்து பரிந்துரைக்கப்பட்டவர்கள் ஆவர்.

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகளாகும்.

சனாதிபதித் தேர்தல்கள் முடிவடைந்ததையடுத்து, 2019 நவம்பரில், அனைத்து நியதிச் சட்ட சபைகளையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கலைக்குமாறு சனாதிபதி செயலகம் கோரியது. அதனைத் தொடர்ந்து, 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதுடன், இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திருமதி கே.எம்.ஏ.என். தவுலகல தலைவராக நியமிக்கப்பட்டதன் மூலம், சபை 2020 மார்ச் 13 இல் அதனது முதல் கூட்டத்தை நடாத்தியது.

2020 இல் செய்யப்பட்ட புதிய நியமனங்களுடன், 2019 இல் இருந்த இரண்டு வெற்றிடங்களான நியமனங்களுடன் ஒப்பிடும்போது, சட்டமூலத்தின் பிரகாரம் சபையின் அமைப்பு பூர்த்தி செய்யப்பட்டது.

ஆண்டின் போது, சட்டமூலத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட சபை உறுப்பினர்களான மெசர்ஸ் ஏ குணசேகர, பி.ஆர்.ஏ.ஐ குணரத்ன மற்றும் பி.டி சமரசிங்க ஆகியோர், ஆண்டின் போது சில SBEs இன் பணிப்பாளர்களாக அல்லது சிரேஷ்ட உத்தியோகத்தர்களாக பணியாற்றியுள்ளனர். அதேபோன்று, சபையின் உறுப்பினர்களாக இருந்த மெசர்கள் எச்.எம்.ஏ.ஜெயசிங்க மற்றும் டபிள்யூ.டபிள்யூ.ஜே.சி. பெரேரா ஆகியோர் சில SBEs ஐ கணக்காய்வு செய்யும் பயிற்சிக் கணக்காளர்களின் நிறுவனங்களின் பங்காளர்களாகவும், சபையின் உறுப்பினராக இருந்த திரு. எஸ்.எம்.எஸ்.எஸ். பண்டார SBE இன் பணிப்பாளராகவும் சில SBEs ஐ கணக்காய்வு செய்யும் பயிற்சி கணக்காளர்களின் நிறுவனமொன்றின் பங்காளராகவும் காணப்பட்டனர்.

மேலும், அந்தக் காலகட்டத்தில், சபைக்கு அழைக்கப்பட்ட திரு. ரீ.ஜே.எஸ். ராஜகாரியர், சில SBEs ஐ கணக்காய்வு செய்யும் பயிற்சி கணக்காளர்களின் நிறுவனமொன்றின் பங்காளராகவும் பணியாற்றினார்.

சபையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு SBE அல்லது அதன் கணக்காய்வாளரிற்குரிய விடயங்கள் தொடர்பான அனைத்து பத்திரங்களும் தொடர்புடைய SBE அல்லது அதன் கணக்காய்வாளருடன் தொடர்பொன்றை கொண்டுள்ள உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும் பத்திரங்களில் இருந்து தவிர்க்கப்படும். அத்தகைய உறுப்பினர்கள் அந்த SBEs இற்குரிய விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கேற்பதில்லை.

முதல் சபைக் கூட்டத்திற்குப் பின்னர் உடனடியாகத் தொடர்ந்த நீண்ட ஊரடங்குச் சட்டம் காணப்பட்ட போதிலும் சபை தொடர்ந்து கூட்டங்களை திட்டமிட்டவாறு நடாத்தியது, முதல் மூன்று கூட்டங்கள் மெய்நிகர் கூட்டங்களாக (virtual meetings) நடாத்தப்பட்டன, பின்னர், புதிய இயல்புநிலை மீண்டும் தொடங்கப்பட்டவுடன், கூட்டங்கள் பௌதீக கூட்டங்களாக நடாத்தப்பட்டன. எனினும், கொவிட் 19 இன் இரண்டாவது அலையிலிருந்து, 2020 ஒக்டோபர் முதல் கூட்டங்கள் மெய்நிகர் கூட்டங்களாக தொடர்ந்து நடாத்தப்பட்டன. அதன் பிரகாரம் சபை ஆண்டின் போது 9 கூட்டங்களை நடாத்தியது.
ஒட்டுமொத்த செயற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் SBEs மற்றும் கணக்காய்வாளர்கள் தொடர்பான குறிப்பிடத்தக்க தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளின் பிரகாரம் பணியாளர்களின் செயலாற்றலை ஆண்டின் போதான சபையின் கலந்துரையாடல்கள் உள்ளடக்கியுள்ளது. SBEs மற்றும் கணக்காய்வாளர்களால் சபையின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள், வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் ஆகியன அங்கீகரிக்கப்படுதல் தொடர்பாக நியமங்களுடன் இணங்காதமை தொடர்பான விடயங்களில் சபை கவனம் செலுத்தியுள்ளது. நடைமுறையில் உள்ள கடுமையான பணியாளர் பற்றாக்குறையின் பிரதிபலிப்பு பொறிமுறைகளின் வினைத்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்கான பல்வேறு அணுகுமுறைகளை மதிப்பாய்வு செய்வதிலும் சபை ஈடுபட்டுள்ளது. மேலும், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் நான்காவது பணிப்பாளர் நாயகத்தை ஆட்சேர்ப்பு செய்வதில் சபை ஈடுபட்டுள்ளது, இது 2019 ஏப்ரல் முதல் வெற்றிடமாக உள்ள பதவிநிலை உரிய நடைமுறைகளுக்கு இணங்கியுள்ளது. மேலும், தொழில்நுட்பச் செயற்பாடுகளைச் மேற்கொள்வதற்கு பொருத்தமான தொழில்சார் ஊழியர்களை ஈர்க்க முடியாமல் போய்க்கொண்டிருக்கும் சிக்கலைத் தீர்ப்பதற்கு சபை ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொண்டது. குறித்த முயற்சியின் விளைவாக, சபையானது தொழில்நுட்ப ரீதியாக திறமையான தொழில்சார் பதவியணியினர்களை ஈர்த்து தக்கவைத்துக்கொள்ள இயலாமை குறித்து திறைசேரி செயலாளருடன் கூட்டமொன்றை நடாத்தியது, இது எதிர்பார்த்த அளவிற்கு ஒழுங்குமுறை செயற்பாடுகளின் செயலாற்றலை தடுக்கிறது. திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில், பதவியணியினர் பிரச்சனையை சமாளிப்பதற்கான முன்மொழிவை சபை சமர்ப்பித்ததுடன், தற்போது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

சபையின் அதிகார கையளிப்பு கொள்கையின் பிரகாரம் தகவல் சேகரிப்பு, நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல், கணக்காய்வுகளை மீளாய்வ செய்தல், விசாரணைகளை நடாத்துதல் மற்றும் பொது விழிப்புணர்வு நடவடிக்கைகளை நடாத்துதல் போன்ற நியமங்களுடன் இணங்குவதைக் கண்காணிப்பது தொடர்பான வழக்கமான செயற்பாடுகள் ஆண்டின் போது பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதி பணிப்பாளர் நாயகம் ஆகியோரால் மேற்பார்வை செய்யப்பட்டு வழிநடாத்தப்பட்ட பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்டன.

## 11. நிதிச் செயலாற்றுகை

வருடத்தின் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) பிரதான நிதி மூலமாக அரசினால் வழங்கப்பட்ட நிதி வழங்கள் மூலமாகவே தொடர்ந்தது. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் செயல்பாடுகள் அரசாங்க நிதியின் மூலம் நிதியளிக்கப்பட்டாலும், இதற்குப் பதிலீடாக, வரி அறவிடலின் பின்னரான பங்குதாரரின் பங்குப் பெறுமதி அல்லது இலாபம் ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகையில் அதிகமான தொகையை சபையின் நிதிச் செலவுகளுக்காக சட்ட வரையறையின்

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

கீழ், நிதி அமைச்சரின் தீர்மானத்திற்கமைய குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட முடியும். எனினும் இந்த முறையினை நிதி அமைச்சு விரும்பாததன் காரணமாக 2008 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படவிருந்த இவ்வரி அறவிடல் திட்டமானது 2008 ஒக்டோபர் 07 ஆம் திகதி கௌரவ அமைச்சரினால் மீளப் பெறப்பட்டது

வீட்டிலிருந்து வேலை செய்யும் ஏற்பாடுகள் மற்றும் அலுவலகத்தில் வருகைப் பட்டியல் அடிப்படையில் நடந்த தொலைதூர வேலை ஏற்பாடுகளின் நேரடி விளைவாக கடந்த வருடத்தின் செலவாகிய ரூபா 78,511,881 உடன் ஒப்பிடுகையில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் வருடத்திற்கான தொழிற்பாட்டுச் செலவு ரூபா 65,159,150 ஆகவிருந்தது. தொழிற்பாட்டுச் செலவுகளில் குறைவானது, முக்கியமாக ஊழியர்களின் செலவுகள், வெளி மதிப்பாய்வாளர்களுக்கு வழங்கப்படும் தொழில்முறைக் கட்டணம், சர்வதேச பயணச் செலவுகள், பயிற்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள், மின்சாரம் மற்றும் தொலைபேசி போன்ற பயன்பாட்டுச் செலவுகள் மற்றும் அலுவலகம் தொடர்பான செலவுகள் ஆகியவற்றில் முக்கியமாகக் காணப்பட்டது. தொற்றுநோய்களின் விளைவாக வெளிநாட்டுப் பயணம் நடைபெறாததால் வெளிநாட்டுப் பயிற்சிச் செலவினம் குறைவாக இருந்ததோடு, ஆண்டின் பெரும்பகுதியில் வெற்றிடமாக இருந்த நான்கு தொழில்நுட்பப் பதவிகளுடன் தொடர்புடைய செலவுகள் இன்மையினால் ஊழியர்களின் செலவுகள் மேலும் குறைவாகக் காணப்பட்டது. முந்தைய செயல்பாட்டுச் செலவுகள் பற்றிய அறிக்கையில் விவரிக்கப்பட்டதன் பிரகாரம் வீட்டிலிருந்து வேலை செய்தல் அடிப்படையிலான செயல்பாடு காரணமாக செயல்பாட்டுச் செலவு முந்தைய ஆண்டின் ரூ. 41,487,633 வுடன் ஒப்பிடுகையில் 11% குறைவடைந்து ரூ. 36,922,897 ஆகக் காணப்பட்டது. மேலும், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் ஊழியர்களின் செலவுகள் 2020 இன் இயக்கச் செலவுகளில் முந்தைய ஆண்டின் 53% உடன் ஒப்பிடும்போது, 57% ஆகும், இது முக்கியமாக மேலே விவரிக்கப்பட்ட செயல்பாட்டுச் செலவில் ஏற்பட்ட சரிவு காரணமாக இருந்தது.

## 12. அபிவிருத்தி திட்டங்கள்

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, ஒழுங்குமுறை செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கத்துடன், வருடத்தினுள், சபையானது மூன்று இயற்கை மூலதன செயற்பாடுகளில் கவனம் செலுத்தியது.

### 12.1 அலுவலக விரிவாக்கம்

SLAASMB ஆனது, தற்போது வாடகைக்கு விடப்பட்டுள்ள அலுவலக வளாகத்தின் புதிய அலுவலகத்தில் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் மேலதிக பணியாளர்களுக்கு இடமளிப்பதற்காக முதல் தளத்தின் உட்புறப் பகிர்வுப் பணிகளைத் தொடர வசதியாக, 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் முடிவடையவுள்ள தற்போதைய அலுவலக வளாகத்தின் குத்தகை ஒப்பந்தத்தை நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்தது,

இந்த அலுவலக விரிவாக்கத்தின் தேவை தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இன்றியமையாததாகும், இது COPE இன் அறிவுறுத்தலின் படி இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) அதிக எண்ணிக்கையிலான குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்களை ஒழுங்குபடுத்த வசதி அமைத்துக் கொடுத்தது.

அருகாமையில் வாடகைக்கு விடக்கூடிய தளங்களின் வாடகை பெறுமதி மற்றும் அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் முன்மொழியப்பட்ட விலைகளின் சந்தை மதிப்பின் ஒப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில், பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட விலையில் குத்தகை ஒப்பந்தத்தை புதுப்பிப்பது முற்றாக வேறு புதிய இடத்தைத் தெரிவு செய்யும் செயற்பாட்டுடன் ஒப்பிடும் போது மிகவும் செலவு குறைந்ததாக இருப்பதாக சபை கருதியது. 2019 ஆம் ஆண்டில் விரிவான தரைத் திட்டம் மற்றும் உட்புறப் பகிர்வு கட்டுமானச் செலவின் பகுப்பாய்வு மற்றும் குத்தகையின் தொடர்ச்சியை ஆண்டு முழுவதும் உறுதி செய்ததன் மூலம், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) 2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில் விலைமனு கோரல் செயல்முறையை மீண்டும் தொடங்குவதன் மூலம் உட்புறப் பகிர்வு வேலையை மேற்கொள்ளலாம் என நம்புகிறது.

### 12.2 முகாமைத் தகவல் முறைமை அபிவிருத்தி (MIS)

மதிப்பாய்வு பொறிமுறையை மேம்படுத்துவதற்கும், பயனுள்ள தரவுத்தள முகாமைத்துவ அமைப்பைப் பயன்படுத்தி அதன் மறுஆய்வுச் செயல்பாடுகளை இலகுபடுத்துவதற்கும் முகாமைத் தகவல் முறைமையின் (MIS) அவசரத் தேவை இருப்பதால், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முகாமைத் தகவல் முறைமையை கொள்வனவு செய்வதற்கான திட்டங்களை இறுதி செய்துள்ளது. அதன்படி, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) 2015 இல் இருந்து பொருத்தமான முகாமைத் தகவல் முறைமையைப் பெற்று செயல்படுத்துவதில் கவனம் செலுத்தியது. இருப்பினும், 2016-2017 காலப்பகுதியில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப முகவரினால் (ICTA) மேற்கூறிய முகாமைத் தகவல் முறைமையின் வளர்ச்சியை எளிதாக்குவதற்காக வழங்கப்பட்ட நிதி மற்றும் ஆலோசனை ஒத்துழைப்பை மீளப் பெற்றுக் கொண்டமையினால், ஒழுங்குமுறை நடவடிக்கைகளை நோக்கி தொழில்நுட்ப முன்னேற்றத்தை இணைப்பதற்கான திட்டங்கள் தோல்வியடைந்தன. அதைத் தொடர்ந்து, 2019 ஆம் ஆண்டில் திட்டத்திற்கான ஆலோசகரொருவரை ஈடுபடுத்துவதற்கு SLAASMB இனால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, எனினும் அதுவும் நிறைவேறவில்லை.
எவ்வாறாயினும், வருடத்தினுள், முகாமைத் தகவல் முறைமை அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) புதிய நிர்வாகத்தின் கீழ் உள்ள ICTA ஐ அணுகியதோடு பொருத்தமான முகாமைத் தகவல் முறைமை அபிவிருத்திக்கான தொடர்ச்சியான ஆலோசனை ஆதரவை வழங்குவதாக ICTA உறுதியளித்தது.

# 2020 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

அதன்படி, ஆண்டின் பிற்பகுதியில், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) மதியுரை சேவைக்காக ICTA உடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்து கொண்டது. தற்போது, ஆவணங்களை வரைதல் மற்றும் விலைமனு கோரலுக்கான பொதுவான நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 12.3 நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்யும் பொறிமுறையினை ஆய்வு செய்வதற்கான மதியுரையாளர் ஒருவரை நியமித்தல்.

நடைமுறையிலுள்ள நிதிக்கூற்றுக்களை மதிப்பீடு செய்யும் பொறிமுறையினை மீளாய்வு செய்வதன் மூலம் அதில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை இனங்கண்டு குறித்த பொறிமுறையில் அவற்றினை இணைத்து மேம்படுத்தப்பட்ட பொறிமுறையொன்றினூடே மீளாய்வு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தல் துறையில் நிபுணத்துவம் மிக்க மதியுரையாளர் ஒருவரின் தேவை இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) ஆர்வமுடைய தகுதியான ஒருவருக்கான விண்ணப்பம் கோரப்பட்ட நிலையில் ஐக்கிய இராச்சியத்தில் நிதிக்கூற்றுக்கள் துறையில் பணியாற்றும் நிபுணர் ஒருவர் குறித்த பணிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

## 13. சூழல் முறைமை சார் நிதிக்கூற்றுக்களை விருத்தி செய்வதற்கான பங்களிப்பு

ஒழுங்குபடுத்தல் பொறிமுறையிலுள்ள நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர் தொடர்பான அறிவினை மேம்படுத்தல் மற்றும் சூழல் முறைமை தொடர்பான மேம்படுத்தல் மற்றும் சூழல் முறைமை தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பான செயற்பாடுகளை வலுப்படுத்துதல் போன்றவற்றுக்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) பொது மக்களுக்கு விழிப்பூட்டுவதற்காக பல் அனுகுமுறைகளை கையாண்டு வருகின்றது. குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள் (SBE) மற்றும் கணக்காய்வாளர்களின் 2019 ஆண்டுக்கான மீளாய்வு கண்டுபிடிப்புக்களை பொது மக்களோடு பகிர்ந்து கொள்ளல் மற்றும் 2018 கருப்பொருள் சார் கணக்காய்வு அறிக்கையினை சிறு தொழில் முயற்சியாளர்கள் கணக்காய்வுக் குழுக்கள் மற்றும் கணக்காய்வாளர்களுக்கு வழங்குவதோடு அதனை இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இணையத் தளத்திலும் பிரசுரித்தல்.

- இரு அங்கத்தவர்கள் இலங்கை வர்த்தக கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் வளவாளர்களாக கலந்து கொண்ட அதே வேளை களனி பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கணக்கீட்டு ஆய்வாளர்கள் மற்றும் கல்வியலாளர்களின் 06 வது சர்வதேச மாநாட்டில் அங்கத்தவர் ஒருவர் முன்வைப்பினை மேற்கொண்டார்.

- நிறுவனப் பதிவாளர் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றின் நிதிசார் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) இற்கு சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து நிறுவன பதிவாளர் நாயகம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளருடன் தொடர்பினை மேற்கொண்டது. குறித்த தேவை குறித்து குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில் முயற்சிகளை அறிவுறுத்துவதற்காக பத்திரிகை விளம்பரங்களும் பிரசுரிக்கப்பட்டன.

- கல்வி அமைச்சு மற்றும் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம். என்பவற்றோடு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) யின் தொழிற்பாடுகள் தொடர்பான காலத்திட்டத்தை விரிவுபடுத் துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது.

## 14. வழமை நிலைமைக்கு திரும்புதல்.

கொவிட் 19 அச்சுறுத்தல் காலத்தில் கணக்காய்வாளர்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பில் 2020 மே மாதம் ஒரு அறிவுறுத்தல் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை (SLAASMB) வெளியிட்டது. இதில் கொவிட் 19 அச்சுறுத்தல் காலத்தில் நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்களை வழிப்படுத்துகின்ற அறிவுறுத்தல்கள் உள்ளடங்கி இருந்தன.

கொவிட் 19 இன் 2 வது அலையின்போது 2021 இல் அவற்றின் சேவையில் பங்களிப்பினை மாற்றமின்றி வைத்துக் கொண்டு புதிய நிலையை (New Normal) நோக்கி நகர்வதற்கு தேவையான அளவீடுகளை உள்ளடக்கிய அறிவுறுத்தல் ஒன்றினை வெளியிட்டது. இவ் அளவீடுகள் நிதிக்கூற்றுக்களை கண்காணித்தல் மற்றும் சமர்ப்பித்தல், கணக்காய்வு மற்றும் பொது நிர்வாகம் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கியிருந்தது. இந்த அறிவுறுத்தல் பங்குதாரர் தொடர்பாடலுக்காக வெளியிடப்பட்டது.

# 2020 ஆம் ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான மீளாய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

### 1. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் (SLAAMB) கண்காணிக்கப்படும் நிதிக்கூற்று

ஆண்டின் போது இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் (SLAASMB) 694 குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் 732 தொகுதி நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மொத்த மீளாய்வில் குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் 45 சதவீதமானவை ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் 55 சதவீதமானவை தனியார் நிறுவனங்களாகும். நீண்டகாலம் நாடு பூட்டப்பட்ட போது மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக தனியார் நிறுவனங்கள் தொடர்பில் அதிக எண்ணிக்கையான மீளாய்வுகள் காணப்பட்டது - அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கடுமையான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக நிதிக்கூற்றுக்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளிற்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலிற்கு வழிவகுத்துள்ளது. இந்தச் செயன்முறையின் போது, SLAASMB மீளாய்வு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொண்டதுடன் நடைமுறைக்குக் கூடிய வரையில் தனியார் துறை குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் சுழற்சி மேவுகை செய்யப்பட்டது.

SLAASMB மூலம் கண்காணிப்பதற்கான நிதிக்கூற்றுக்களைத் தெரிவுசெய்தல் தொழில் சார்ந்த இடர் அளவுகோலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு செயற்பாடானது குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களின் விரிவான மீளாய்வொன்றாக, நிதிக்கூற்றுக்களின் வழக்கமான மீளாய்வு அல்லது விடயப்பொருள் சார்ந்த மீளாய்வாக இடம்பெறுகிறது.

### 2. குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB's) தொடர் பங்களிப்பு

கொவிட் 19 தொற்றுநோய்க்கு மத்தியில், நிதிக்கூற்றுக்களை சரியான நேரத்தில் தயாரிப்பதற்கும், ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கு சமர்ப்பிப்பதற்கும் குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் எதிர்கொள்ளும் இடையூறுகளைக் கண்டறிந்து, SLAASMB ஆனது ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுடன் அனைத்து குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளும் இணங்கக்கூடிய வகையில் தற்காலிக நடவடிக்கையொன்றாக இணையத்தளத்தில் விபரமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல், தகவல்களை கோரி பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தொடர்பாடல் செயன்முறை தொடர்பான அதன் நடைமுறைகளை மாற்றியமைத்ததுள்ளது.

### 3. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை கண்காணிப்பதன் முடிவுகள்

இந்த ஆண்டில், நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியவற்றில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு SLAASMB இரண்டு குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளிடமிருந்து பணிகளைப் பெற்றது, அங்கு இலங்கை கணக்கீட்டு நியமங்களில் இருந்து பொருண்மையான விலகல்கள் கண்டறியப்பட்டன. 2020 ஆம் ஆண்டின் போதான மீளாய்வு கண்டுபிடிப்புகள் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 1% இணக்கமற்றவை என்றும், மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 59% இணக்கமானவை என்றும், நிதிக்கூற்றுக்களில் 40% உதவிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட முன்னேற்றங்களுடன் இணங்கியுள்ளன என்றும் வெளிப்படுத்தியுள்ளன. அவர்களின் எதிர்கால நிதி அறிக்கையிடலை மேம்படுத்தும் நோக்கத்துடன் 293 நிதிக்கூற்றுத் தொகுதிகள் தொடர்பான முன்னேற்றங்கள் உதவிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### 4. நிதிக்கூற்றுக்களின் மீளாய்வின் போதான கண்டுபிடிப்புக்கள்

#### 4.1 தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு SBEs இடமிருந்து பெறப்பட்ட பணிகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்தான விலகல்களின் பொருண்மைத் தன்மையின் அடிப்படையில், SLAASMB நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பதில் திருத்தங்களைச் செய்வதற்கு இரண்டு SBEs இடமிருந்து பணிகளைப் பெற்றது.

SBEs ஆல் இணங்காத இலங்கைக் கணக்கீட்டு நியமங்களிற்கான (முன்னர் நிர்ணயிக்கப்பட்ட SLFRS / LKAS) தொடர்புடன் சேர்த்து பெறப்பட்ட பணிகளிற்கான உருப்படிகளின் வகைகள் பின்வருமாறுள்ளன

- LKAS 18 உடன் ஒப்பிடும் போது SLFRS 15 ஐப் பயன்படுத்துவதன் காரணமாக தற்போதைய அறிக்கையிடல் காலப்பகுதியில் நிதிக்கூற்று வரிசை உருப்படிகளை பாதிக்கும் தொகைகளை சரியாகக் இனங்காணத் தவறியமை. (தொடர்பு பின்னிணைப்பு இ இன் SLFRS 15 பந்தி, 3 (M))
- LKAS 36 இல் பரிந்துரைக்கப்பட்ட நியாயமான பெறுமதியிலிருந்து விற்பனை செய்வதற்கான கிரயம் கழிக்கப்பட்ட பெறுமதி முறையைப் பயன்படுத்தி, சங்கத்திலுள்ள முதலீட்டின் அறவிடப்படக்கூடிய பெறுமதியை மதிப்பிடுவதில், சாத்தியமான பல நியாயமான பெறுமதி நுட்பங்களைப் பயன்படுத்த தவியமை. (தொடர்பு SLFRS 13 பந்தி M 40)

2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட பணிகளின் விபரங்கள் பக்கம் ஈபக்கம் எண், இல் கொடுக்கப்பட்டுள்ளன.

#### 4.2 நியமங்களுடன் இணங்குவதை அதிகரிப்பதற்கான முன்னேற்றங்களின் தொடர்பு

நியதிச்சட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துகின்ற நடைமுறைகளின் பயன்பாடு அவசியமில்லை என கண்டறியப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களில் இருந்தான விலகல்கள் SBEs இற்கு முன்னேற்றங்களாக கடிதங்கள் மூலம் விரிவான விசாரணைகள் இல்லாமல் தெரிவிக்கப்பட்டது, இதனால் SBEs ஆல் தேவையான இடங்களில் சொந்தமாக இணக்கப்பாட்டை மேம்படுத்த முடியும்.

உதவி கடிதங்களின் வடிவில் SBEs இற்கு எந்த முன்னேற்றங்கள் தெரிவிக்கப்பட்டன என்பது தொடர்பான முக்கிய கண்டுபிடிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன்

- 83 SBEs இல் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியில் நிறுவனத்திற்கு வெளிப்படுத்தப்படும் நிதிக் கருவிகளிலிருந்து எழுகின்ற

# 2020 ஆம் ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான மீளாய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

இடர்களின் தன்மை மற்றும் அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளிலிருந்து எழும் தொகைகள் பற்றிய அளவு மற்றும் தரமான தகவல்கள் தொடர்பாக போதுமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. (தொடர்பு SLFRS 7 பந்திகள் 31 முதல் 42 வரை)

- SME துறையில் உள்ள 18 SBEs உட்பட 76 SBEs இல் தொடர்புடைய தரப்பினர் உறவுமுறைகளின் தன்மை மற்றும் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய தகவல்கள் தொடர்பான போதுமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. (தொடர்பு LKAS 24 பந்தி 18 மற்றும் SME பிரிவு 33 பந்தி 33.9)

- SME துறையில் உள்ள 25 SBEs உட்பட 68 SBEs இல் வரிச் செலவினத்திற்கும் கணக்கீட்டு இலாபத்திற்கும் இடையே உள்ள தொடர்பு மற்றும் வரி இழப்புக்கள் தொடர்பான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை இனங்காண்பதற்கான சான்றாதாரங்கள் என்பன போதுமானளவு வெளிப்படுத்தப்படவில்லை. (தொடர்பு LKAS 12 பந்தி 81 மற்றும் SME பிரிவு 29 பந்தி 29.32)

- 65 SBEs இல் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்கள், மதிப்பீட்டு நுட்பங்களுக்கான உள்ளீடுகள், பயன்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க கவனிக்க முடியாத உள்ளீடுகள் பற்றிய அளவுத் தகவல்கள், நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகிற ஒவ்வொரு வகை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிற்கான உள்ளீடுகள் மற்றும் நியாயமான பெறுமதி ஆகியவற்றில் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தொடர்பாக போதுமானளவு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. (தொடர்பு SLFRS 13 பந்திகள் 91 மற்றும் 93)

- SME துறையில் உள்ள 13 SBEs உட்பட 40 SBEs இல் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களை இனங்காணும் போது அல்லது அத்தகைய பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களை பயன்படுத்துவதற்கு எதிர்கால வரி விதிக்கத்தக்க இலாபங்கள் எவ்வளவு கிடைக்கின்றன என்பதைப் பொருட்படுத்தாமல் முன்கொண்டுவரப்படுகின்ற வரி இழப்புக்கள் தொடர்பாக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை இனங்காணும் போது அனைத்து வரி விதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளும் கருத்தில் கொள்ளப்படவில்லை. (தொடர்பு LKAS 12 பந்திகள் 15, 24, 34 மற்றும் 48 மற்றும் SME பிரிவு 29 பந்தி 29.12)

- 35 SBEs இல் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை மற்றும் குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் / அல்லது நிதிக்கூற்றுக்களைப் புரிந்துகொள்வதற்குப் பொருத்தமான அளவீட்டு அடிப்படைகள் மற்றும் ஏனைய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பாக போதுமானளவு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (தொடர்பு LKAS 1 பந்திகள் 112 மற்றும் 117)

- SME துறையில் உள்ள 5 SBEs உட்பட 17 SBEs இல் நிதிச் சொத்தொன்று அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி தொடர்பாக ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் நட்டக்கழிவு குறிகாட்டிகள் காணப்படும் போது அல்லது நட்டக்கழிவு இழப்புக்களை இனங்காணாத போது காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகிற நிதிச் சொத்தின் மீது எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்காக இழப்பீட்டு படி இனங்காணப்படவில்லை. (தொடர்பு SLFRS 9 பந்தி 5.5.1 மற்றும் SME பிரிவு 11 பந்தி 11.21)

- 16 SBEs இல் பணத்தின் காலப் பெறுமதியை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கருவியின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக்கள் அளவிடப்படவில்லை. (தொடர்பு SLFRS 9 பந்தி 5.5.17)

- SME துறையில் உள்ள 13 SBEs உட்பட 28 SBEs இல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு தொடர்பான அனைத்து தொடர்புடைய தகவல்களும் வெளிப்படுத்தப்படவில்லை (தொடர்பு LKAS 16 பந்திகள் 77 மற்றும் SME பிரிவு 17 பந்தி 17.33)

- 10 SBEs இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதிகள் கொண்டுசெல்லும் தொகைகளிலிருந்து பொருண்மையாக வேறுபடும் போது வழக்கமான மீள்மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. (தொடர்பு LKAS 16 பந்தி 31)

- அறிக்கையிடல் காலத்தின் முடிவில் குறைபாடு இருப்பதற்கான அறிகுறி இருக்கும் போது ஒரு சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய தொகையை மதிப்பிடவில்லை - SME துறையில் 2 உட்பட 9 SBE களில் (தொடர்பு LKAS 36 பந்தி 8 மற்றும் 9 மற்றும் SME பிரிவு 27 பந்தி 27.5)

- 9 SBEs இல் சொத்தின் எதிர்காலப் பொருளாதார நலன்கள் அந்த நிறுவனத்தால் நுகரப்படும் என எதிர்பார்க்கப்படும் முறையைப் பிரதிபலிக்காத வகையில் சொத்து பயன்பாட்டிற்குக் கிடைக்கக்கூடிய காலத்திலிருந்து சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு அல்லது பயன்படுத்தப்படும் பெறுமானத்தேய்வு முறை இனங்காணப்படவில்லை. (தொடர்பு LKAS 16 பந்திகள் 55 மற்றும் 60)

- 8 SBEs இல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாததுடன் நிதிச் செயலாற்றல் மற்றும் நிதி நிலைமை தொடர்பான உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை முன்வைக்கும் நோக்கத்துடன் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. (தொடர்பு1995 இன் 15 ஆம் இலக்க சட்டம் பிரிவு 6 (1))

# 2020 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட பணிகள்

### 1. மில்லேனியம் ஹவுசிங் டெவலப்பர்ஸ் பிஎல்சி

மில்லேனியம் ஹவுசிங் டெவலப்பர்ஸ் பிஎல்சியின் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், 'SLFRS 15 ஐ பின்பற்றுவதன் தாக்கம்" என வெளிப்படுத்தப்பட்ட தொகைகளின் குறிப்பிடத்தக்க பகுதி, முன்னைய ஆண்டில் (2018) வருமானத்தை இனங்காண்பதில் ஏற்பட்ட பிழையைத் திருத்துவது தொடர்பான தொகைகளை உள்ளடக்கியுள்ளது. SLFRS 15 ஐ முதன்முறையாக பின்பற்றுவதன் காரணமாக இது வருமானத்திற்கான தாக்கத்தை வெளிப்படுத்துவதை பொருண்மையாக தவறாக குறிப்பிடுவதை விளைவிக்கின்றது.

கணக்காய்வாளர் இவ் விடயம் தொடர்பாக அவரது அபிப்பிராயத்தை முனைப்பழியுள்ளதாக்கியிருக்கவில்லை.

SLAASMB ஆல் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, LKAS 18 உடன் ஒப்பிடும் போது SLFRS 15 ஐ பயன்படுத்தியதன் விளைவாக, சரியான தொகைகளை மீள்மதிப்பீடு செய்த பின்னர் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியான வெளிப்படுத்தலை பிழையொன்றாக அறிவிப்பதை நிறுவனம் மேற்கொண்டது.

### 2. ஹிக்கடுவ பீச் ரிஸோர்ட் பிஎல்சி

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஹிக்கடுவ பீச் ரிஸோர்ட் பிஎல்சியின் நிதிக் கூற்றுக்களில் உள்ள அசோசியேட்-கொழும்பு லேண்ட் அன்ட் டெவெலப்மென்ட் கம்பனி பிஎல்சியின் முதலீட்டின் அறவிடக்கூடிய பெறுமதியை மதிப்பிடும் போது கம்பனி பணத்தை உருவாக்கும் அலகின் (அதாவது, அசோசியேட்டின்) விற்பதற்கான குறைந்த கிரய நியாய பெறுமதியை பயன்படுத்தியிருந்தது. இது குறித்த அசோசியேட்டின் தேறிய சொத்துகளின் நியாயமான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

குறித்த அசோசியேட்-கொழும்பு லான்ட் அன்ட் டெவெலப்மென்ட் கம்பனி பிஎல்சியின் தேறிய சொத்துக்களின் நியாயமான பெறுமதியை மதிப்பிடும் போது மதிப்பீட்டு நுட்பத்தைப் பயன்படுத்தி கம்பனியால் நிர்ணயிக்கப்பட்ட ஆதனத்தின் நியாயமான பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், அசோசியேட் - கொழும்பு லான்ட் அன்ட் டெவெலப்மென்ட் கம்பனி பிஎல்சியின் நிதிக்கூற்றுக்களில் ஆதனத்தின் நியாயமான பெறுமதியாக பிரதிபலித்த பெறுமதிக்கு குறித்த பெறுமதி கணிசமாக வேறுபட்டது.

வெவ்வேறு மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி குறிப்பிடத்தக்க வேறுபட்ட பெறுமதிகள் பெறப்பட்டுள்ளன. எனினும், இரண்டு மதிப்பீட்டு நுட்பங்களின் பெறுபேறுகள், நியாயமான பெறுமதியின் மிகவும் பிரதிநிதித்துவமான வீச்சினுள் உள்ள புள்ளியில் வருவதற்குப் பயன்படுத்தப்படும் பெறுமதிகளின் வீச்சின் நியாயத்தன்மையைக் கருத்தில் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வாளர் இவ் விடயம் தொடர்பாக அவரது அபிப்பிராயத்தை முனைப்பழியுள்ளதாக்கியிருக்கவில்லை. SLAASMB ஆல் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்குப் பின்னர், அசோசியேட்-கொழும்பு லான்ட் அன்ட் டெவெலப்மென்ட் கம்பனி பிஎல்சியின் முதலீட்டின் கொண்டுசெல்லும் பெறுமதியைக் கண்டறிவதற்காக, சாத்தியமான பல மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி, அத்தகைய நுட்பங்களின் விளைவுகளிடையே ஒரு சிறந்த ஒப்பீட்டை செயற்படுத்தும் பொருட்டு கம்பனி மீண்டும் மதிப்பீட்டை மேற்கொண்டது.

# 2020 ஆம் ஆண்டின் போதான கணக்காய்வு கண்டுபிடிப்புகள்

### 1. SLAASMB இன் கணக்காய்வு கண்காணிப்பு

மீளாய்வு நடவடிக்கைகளின் விவரிக்கப்பட்டுள்ளபடி, இலங்கை கணக்கீட்டுத் நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் (SLAASMB) இரண்டு பிரதான செயற்பாடுகளில் ஒன்று, குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில் முயற்சிகளின் (SBEs) கணக்காய்வாளர்களினால் கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது, அவை இலங்கை கணக்காய்வு நியமங்களுடன் இணங்குவதை கண்காணிப்பதாகும். SLAASMB பொது நோக்கத்திற்காக தெரிவு நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு செய்வதன் மூலம் அவை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்துவதை கண்காணிக்கிறது SLAASMB இன் இந்த கணக்காய்வு கண்காணிப்பு செயற்பாடானது, கணக்காய்வுச் சந்தை சூழலில் கணக்காய்வின் தரத்தை மேம்படுத்தும்நோக்கத்தைக் கொண்டது. மறுதலையாக, தரமான கணக்காய்வானது, கணக்கீட்டு அறிக்கையிடுதலை மேம்படுத்துவதுடன், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வளர்க்கவும், மூலதனச் சந்தை மேம்பாட்டை ஆதரிக்கவும் உதவும். ஆழமான கணக்காய்வினை மேம்படுதுவதினூடாக அடைந்து கொள்ளக்கூடிய பரந்தளவிலான நன்மைகளின் மீது நீண்டகால நன்மைகள் மேம்பட்ட நிதி அறிக்கை நடவடிக்கைக்கு பங்களிக்கிறது. மேம்பட்ட கணக்காய்வுத் நியமத்தின் தொலைநோக்குப் பலன்களில் கவனம் செலுத்தும் முகமாக SLAASMB ஆனது தற்போதுள்ள செயல்முறைகளில் உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் கணக்காய்வு பொறிமுறையை மேம்படுத்த பல முயற்சிகளை எடுத்துள்ளது. SLAASMB ஆல் மேற்கொள்ளப்படும் கணக்காய்வு கண்காணிப்பானது குறித்தொதுக்கப்பட்ட வழமையான கணக்காய்வுகளாகவும் கருப்பொருள் குறித்தொதுக்கப்பட்ட கணக்காய்வு சோதனைகளாக கணக்காய்வு முழுவதும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கருப்பொருளின் விரிவான மதிப்பாய்வில் கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளது. SLAASMB கணக்காய்வுகளை இடர் அடிப்படையிலான அணுகுமுறையாகவும், எழுமாதிரியான சோதனைத் தேர்வு அணுகுமுறையாகவும் ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கிறது. இருப்பினும், தொடர்ச்சியான முன்னேற்றத்தின் அடிப்படையில், இவ்வாண்டில் SLAASMB கணக்காய்வுகளை சோதனைக்காகத் தெரிவுசெய்யும் போது புதிய இடர் அடிப்படையிலான தேர்வு அணுகுமுறையை கையாள முயற்சித்தது, இது 2021 முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 2. கணக்காய்வுச் செயற்பாட்டில் கோவிட் 19 தாக்கம்

கோவிட் 19 தொற்றுநோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் தாக்கங்கள் கணக்காய்வுத் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. நடமாட்டங்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் தொலைதூர பணிச்சூழல் ஆகியவை பல கணக்காய்ாளர்களுக்கு தொலைதூர இடங்களிலிருந்து கணக்காய்வுகளைச் செய்வதற்கு வழிவகுத்தது.

கணக்காய்வுகளை தொலைதூர அடிப்படையில் மேற்கொள்வதற்கு தகவல் தொழில்நுட்பத்தில் அதிகம் தங்கியிருக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. தொலைதூரத்தில் கணக்காய்வுகளை மேற்கொள்வதை நோக்கி நகர்ந்த அபிவிருத்தியடைந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைக் கொண்ட நாடுகளில் இதனைத் தெளிவாக காண முடிகிறது. எவ்வாறாயினும், இலங்கையில், இருக்கின்ற தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் அடிப்படையில் கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது கணக்காய்வாளர்கள் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்நிலைமையானது, கணக்காய்வு நிறுவனங்களுக்கு டிஜிட்டல் மயமாக்கல் கணக்காய்வு முறைகளில் அதிகம் முதலீடு செய்ய புதிய வாய்ப்புகளை வழங்கியுள்ளது. உலகளாவிய ரீதியில் சர்வதேச தொலைத்தொடர்புகளின் உறுப்பினர்களும் தங்கள் கணக்காய்வு முறைகளை டிஜிட்டல் மயமாக்கும் பயணத்தை வேகப்படுத்தியுள்ளனர். இந்த நடவடிக்கையானது சர்வதேச அளவில் தற்காலத்தின் போக்காக பார்க்கப்படுகிறது. அறிக்கையிடல் காலக்கெடுவை சந்திக்கும் போது கணக்காய்வாளர்கள் நேர அழுத்தத்துக்கு முகங்கொடுப்பதைக் உணரக்கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும், கொழும்பு பங்கு பரிவர்த்தனையால் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்படும் அறிக்கையிடுவதற்கான காலக்கெடு நீற்சிகளானது கணக்காய்வாளர்களுக்கு இவ்விடயத்தில் உதவியது என்பதில் சந்தேகமில்லை.

பொதுவாக, சகல கணக்காய்வாளர்களும் தொலைதூர கணக்காய்வு, நேரக் கட்டுப்பாடுகள், தகவல் கிடைப்பது மற்றும் முகாமைத்துவத்தை நேரடியாக அணுகுவது போன்ற அம்சங்களில் கணக்காய்வுகளை மேற்கொள்வதில் சவால்களை எதிர்கொண்டுள்ளனர். நேரடியாக செல்வதற்கு காணப்படும் வரையறை காரணமாக கணக்காய்வுச் சான்றுகளைச் சேகரிப்பதில் உள்ள சிரமங்கள் காரணமாக வழக்கமான காகிதப் படிவத்திற்குப் பதிலாக டிஜிட்டல் வடிவில் தகவல்களைப் கணக்காய்வாள்கள் பெறுகிறார்கள். பௌதீக வடிவமைப்பற்ற ஆதாரங்களின் மீது அதிகம் தங்கியிருத்தலானது கணக்காய்வாளர்களின் தொழில்சார் மதிப்பீட்டினை கணக்காய்வின் பல்நிலை நோக்கங்களுக்காக பயன்படுத்தும் தேவையுள்ளது. மேலும் அத்தகைய கணக்காய்வு ஆதாரங்களின் நம்பகத்தன்மையயை உறுதி செய்வதற்காக மேலதிக ஒழுங்குவிதிகளை செயற்படுத்த வேண்டியுள்ளது. நிறுவனங்களானது, வழமையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளிலிருந்து விலகி தொலைவிலிருந்து செயல்பட வேண்டியுள்ளதுடன், நிறுவனங்களால் எடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நெருக்கமாக கண்காணிக்க கணக்காய்வுளர்களைக் கட்டாயப்படுத்தியுள்ளது. மேலும்,

# 2020 ஆம் ஆண்டின் போதான கணக்காய்வு கண்டுபிடிப்புகள்

நிறுவனங்களின் செயல்பாட்டு சூழலில் தொற்றுநோயின் தாக்கமானது, சொத்துக்களின் மதிப்பீட்டுடன் தொடர்புடைய கணக்காய்வு அபாயத்தை அதிகரித்துள்ளது (சொத்துக்களின் குறைபாடு, நிதிச் சொத்துக்களில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் மற்றும் பிற்போடப்பட்ட வரி சொத்துக்களை மீட்டெடுப்பது போன்றவை) மற்றும் பொறுப்புக்களை முழுமைப்படுத்துவற்கான மதிப்பீடு செயற்பாட்டிலும் இந்த ஆபத்து காணப்படுகிறது. மேலும், கோவிட் 19 தொற்றின் தாக்கம் வியாபாரங்களில் ஏற்பட்டுள்ளதால், தொடர்ந்து அந்நிறுவனத்தை நடாத்திச் செல்வதில் நிறுவனத்துக்கு இருக்கும் திறனைப் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகளின் சான்றுகள் குறித்து கணக்காய்வாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். அதன்படி, கணக்காய்வாளர்கள் இந்த சவாலான காலகட்டத்தில் கணக்காய்வுகளை மேற்கொள்ளும்போது, கணிசமான அளவு தொழிற்துறை சார்ந்த முடிவுகளை பயன்படுத்தவும், சந்தேகப்பார்வையுடன் இருக்கவும் நெறிமுறைப் பொறுப்பில் கவனம் செலுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

## 3. நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்

சோதனைகளின்போது கண்டறியப்பட்ட அவதானிப்புகளின் தீவிரத்தன்மையை அடிப்படையாக கொண்டு இலங்கையில் தரமான கணக்காய்வு சூழலை மேம்படுத்தும் நோக்கத்தை அடைவதற்காக கணக்காய்வாளர்கள் தங்களை மேம்படுத்திக்கொள்ளும் முயற்சிகளுக்கு SLAASMB பல்வேறுபட்ட நடவடிக்கைள் மேற்கொண்டு வருகிறது.

வழக்கமான கணக்காய்வுகளின் போது இலங்கை கணக்காய்வுத் நியமங்களுக்கு இணங்காமைகள் அவதானிக்கப்பட்டு ஆனால் அவை சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கத் தேவையற்ற பௌதீக ஆதாரங்களைக் கொண்டிராதவையாக இருப்பின் அத்தகைய குறைபாடுகள் கணக்காய்வு நிறுவனங்களுக்கு "அவதானிப்பு கடிதங்கள்" எனப்படும் உதவி கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படுகின்றன. கணக்காய்வின் தரத்தை மேம்படுத்துவதற்காக கணக்காய்வுகளின் மேம்பாடுகள் தேவைப்படும் போது, அத்தகைய மேம்பாடுகள் மேம்பாட்டிற்கான பரிந்துரைகளாக தெரிவிக்கப்படுகின்றன. மேலும், ஒரு SBE கணக்காய்வு செய்யப்படும்போது தொழில்முறை திறன் மற்றும் சரியான கவனிப்பு ஆகியவற்றின் அடிப்படை நெறிமுறைக் கோட்பாடுகளைப் கடைபிடிக்க ஒரு கணக்காய்வாளர் தவறியுள்ளமை கண்டறியப்பட்டால், சபையின் ஒப்புதலுடன் குறித்த கணக்காய்வு நிறுவனம் எதிர்காலத்தில், நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுகளை மேற்கொள்ளும்போது பொருந்தக்கூடிய கணக்காய்வு நியமங்களின் தேவைகளுக்கு ஏற்ப, விடாமுயற்சியுடன் செயல்பட வேண்டும் எனக்குறிப்பிட்டு எச்சரிக்கை கடிதம் ஒன்று வழங்கப்படுகிறது. மேலும், பிரச்சினைகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில், தேவைப்படும் சந்தர்ப்பங்களில், SLAASMB விலகல்களை சட்டமா அதிபரிடம் ஆலோசனைக்காகப் பரிந்துரைக்கிறது மற்றும் அத்தகைய விடயங்கள் CA இலங்கைக்கும் பொருந்தக்கூடிய பிற நிதித் துறை ஒழுங்குபடுத்துனர்களுக்கும் பொருத்தமாக இருந்தால் அனுப்பப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டில், ஒரு கணக்காய்வுச் சோதனை சட்டமா அதிபருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

## 4. பொதுவான கணக்காய்வு ஆய்வுகள்

2019 ஆம் ஆண்டில் 7 கணக்காய்வு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட 33 கணக்காய்வு ஈடுபாடுகளுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டில் வழமையான கணக்காய்வுச் செயற்பாடுகளாக 7 கணக்காய்வு நிறுவனங்களால் 27 கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் சோதனைப் பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததன் காரணமாக மொத்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகள் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது குறைவாக காணப்பட்டன. மேலும், சமூக இடைவெளியைப் பேணல், கருப்பொருள் கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது நேரடியாக தொடர்பு கொள்வதற்கான நேரடித்தொடர்புகளை மேற்கொள்வதற்கிந்த கட்டுப்பாடுகள் காரணமாக, கருப்பொருள் கணக்காய்வுகளை மேற்கொள்ளும் திட்டம் மீள மதிப்பீடு செய்யப்பட்டது. கணக்காய்வுயப்பட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளில் கோவிட் 19 இன் தாக்கத்தை அவதானிக்கும்போது கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வு நடைமுறைகளின் சரியான தன்மையை மதிப்பாய்வு செய்ய கூடுதல் நேரத்தை ஒதுக்க வேண்டியிருந்ததன் காரணமாக கணக்காய்வுகள் வழக்கமான கணக்காய்வுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டன. மேலும் SLAASMB அவ்வாண்டில் 2018 இல் நடாத்தப்பட்ட கருப்பொருள் கணக்காய்வின் போது கண்டுபிடிப்புக்களை பூர்த்தி செய்து அறிக்கை வெளியிடப்பட்டது.

### 4.1 உதவிக் கடிதம்

